1454

Reg. No M. 2147.

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to Agriculture and its allied subjects.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

Vol. 10 புத்தகம் 10	பிரபவஹு வைகாசிமீ 1உ 1927-ம்ஹு மேமீ 14உ	No. 2. பிரதி. 2.

Contents.

Coconut	29
Groundnut	33
Plant Food	37
Loans for building granaries	40
Review	45
The Royal commission	46
Cattle & Veterinary Section	47
How Prickly Pear can be easily converted into Manure	48
Correspondence	51
News & Notes	55
Calendar	56

பொருளடக்கம்	பக்கம்
தென்னை	29
மணிலாக் கொட்டை	33
பயிருணவு	37
குதில்கள் கட்ட சர்க்கார் கடன் கொடுத்தல்	40
விமர்ஸனம்	45
விவசாயக் கமிஷன்	46
கால் நடைப் பகுதி	47
சப்பாத்துக்கள்ளி சல்லீசாய் உரமாவ தெவ்வாறு ?	48
கடிதம்	51
குறிப்புகள்	55
பஞ்சாங்கம்	56

Editor : Rao Bahadur J. Chelvaranga Raju

" Jagannadha Baugh " Saidapet,

Annual Subscription including Postage Re one only.

Copy Right] [Registered.

"STAR BRAND"

ஸ்டார் பிராண்ட்

SULPHATE OF AMMONIA

ஸல்பேட் ஆப் அம்மோனியா

ராமச்சந்திர ரெட்டியார்:—உடையாரவாள்! உங்களுடைய வண்டியில் போகும் மூட்டைகள் என்ன?

குழந்தைவேலு உடையார்:—நல்ல கேள்வி கேட்டீர்; நக்ஷத்திரமார்க்கு ஸல்பேட் ஆப் அம்மோனியா, ஸூபர்பாஸ்பேட், என்னும் எருக்களைப்பற்றி கேட்டதுகூட இல்லை போலும்?

ராமரெட்டி:—ஊரிலெல்லாம் உபயோகிக்கும் புதிய உரங்கள் இவைகள் தானா? சரிதான்; இந்தப்பக்கத்தில் ஏராளமாய் நெல் வயலுக்கு இவை இரண்டையும் உபயோகிக்கிறார்களாமே; அப்படியாயின் கரும்பிற்கும் இதைப் போடலாமோ?

கு. உ:—தடையென்ன? நானே இவைகளை என் நெல்லுக்கும் கரும்பிற்கும் உபயோகித்து நல்ல லாபத்தை யடைந்திருக்கிறேன். மற்றும் கோயமுத்தூரிலுள்ள என் தம்பியும், கேழ்வரகு, புகையிலை, மிளகாய் முதலியவைகளுக்கு உபயோகித்து மிகுந்த பலனை அடைந்திருக்கிறதாகத் தெரிவித்திருக்கிறான். வெங்காயம், சோடிக்கால், காய்கறி, கிழங்குகள், தென்னை, வாழை முதலிய பழ மரங்களுக்கும் உபயோகித்து வருகிறார்களாம், இது மாத்திரமல்ல, இதில் ஒருவித துர்நாற்றமும் இல்லை. மதாசாரக் கொள்கைக்கு விரோதமான வஸ்துவின் ஸம்பந்தமே கிடையாது; விலையோ மிகவும் ஸரஸம்.

ராமரெட்டி.—அப்படியானால் இவைகளின் விலையென்ன?

கு. உ.—ஸல்பேட் ஆப் அம்மோனியா 80 ராத்தல் கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ. 8-8-0 வீதமும், 112 ராத்தல் கொண்ட ஸூபர் பாஸ்பேட் மூட்டை ஒன்றுக்கு ரூ: 5-8-0 வீதமும்; ஸாமல்கோட்டை தென்னாலி, நெல்லூர், பெஜவாடா, ஹாஸ்பெட், கடப்பை முதலிய இடங்களிலும், தமிழ்நாட்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், மதுராந்தகம், விழுப்புரம், குடியாத்தம், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, பொள்ளாச்சி கோயமுத்தூர், ஈரோடு, முதலிய இடங்களிலும் மைசூர் ராஜ்யத்தில் பெங்களூர், மைசூர், தொட்டபலாப்பூர், சிக்பலாப்பூர், சிக்மகளூர், ஹாசென் முதலிய இடங்களிலும், இண்டோ அக்ரி லிமிடெட்டால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள டெப்போக்களில் கிடைக்கும்.

இவர்களின் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே பக்கத்து வயலிலிருந்துவரும் ஆராவமுத அய்யங்கார் எங்கள் கிராமத்தோர் அனைவரும் சேர்ந்து மொத்தமாய் வாங்கினதில் விலை இன்னும் ஸரஸமாய் கிடைத்ததாலும் நீங்களும் இவ்விதமே சேர்ந்து மொத்தமாய் சென்னை ஷாவாலெஸ் கம்பெனியாரவர்களுக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பர்ட்டிலைஸர் பிராபகண்டா அப் இந்தியா லிமிடெட்.

காரியதரிசிகள்:—ஷாவாலஸ் அண்டு கம்பெனி, மதராஸ்.

Fertiliser Propaganda of India, Limitd.

Secretaries Shaw Wallace & Co. MADRAS,

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to Agriculture and its allied subjects.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

Vol. 10 புத்தகம் 10	பிரபவ௵ வைகாசி௴ 1௳ 1927-ம்௵ மே௴ 14௳	No. 2. பிரதி. 2.

COCONUT.

தென்னை.

இவ்விராஜதானியில் இப்பயிர் ஏறக்குறைய 5½ லக்ஷம் ஏகராக்களில் பயிர் செய்யப்படுகின்றது. மலையாளத்தில் மாத்திரம் 3 லக்ஷத்து 28 ஆயிரம் ஏக்கர்களிலும் இதர ஜில்லாக்களில் மீதி விஸ்தீரணத்திலும் பயிர் செய்யப்படுகிறது. தென்கன்னடம் ஜில்லா கோதாவரி ஜில்லா இவைகள் ஒவ்வொன்றிலும் அனேகமாய் 46,700 ஏகராக்களும் வட ஆற்காடு, கஞ்சம், சேலம் இஜ்ஜில்லாக்களில் ஒவ்வொன்றிலும் முறையே 13.115—12,000—11,464 ஏக்கராக்களும் சாகுபடியாகின்றன. கிருஷ்ணா, கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சினாப்பள்ளி இவைகளில் முறையே 8,872—7,837—6,937—6,310 ஏகராக்களில் பயிராகின்றன. மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் முறையே 5,875—4,723—4,467 ஏகராக்களில் சாகுபடியாகிறது. தென் ஆற்காடு, விசாகபட்டணம், சித்தூர், பெல்லாரி ஜில்லாக்களில் முறையே 3,272—3,073—2,753—2,250 ஏகராக்களில் பயிராகிறது. அனந்தபூர், குண்டூர் ஜில்லாக்களில் முறையே 702—657 ஏகராக்களில் பயிராகிறது. நெல்லூர், கடப்பை, கர்நூல் ஜில்லாக்களில் முறையே 357—153—107 ஏகராக்களில் பயிரிடப்படுகிறது.

மேல்கண்ட கணக்குகளை ஆராய்ந்து பார்க்கும்போது அந்தந்த ஜில்லாக்களில் சாகுபடியாகும் விஸ்தீரணம் வித்தியாசப்படுவதின் காரணம் எக்காரணத்தைக் கொண்டு என்று தீர்மானமாய்ச் சொல்லக் கூடவில்லை. மண்ணினியல்பைக் கொண்டு வித்தியாசப்படுகிற

தென்று சொல்லவோ மாற்கமில்லை. ஏனென்றால் ஒரே விதமான மண்ணியல்பு உள்ள கடப்பை, பெல்லாரி, கர்னூல் ஜில்லாக்களில் உள்ள விஸ்தீரண பேதங்களில் வித்தியாசமிருக்கிறது.மழைபதம்இதற்குக் காரணமாயிருக்கக் கூடுமென்று எண்ணினால் அதுவும் பொருந்தவில்லை. ஏனென்றால் தஞ்சாவூர், தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் சில பாகங்களில் வருஷம் ஒன்றுக்கு 45 செவி (45 இன்சுகள்) மழை பெய்வதாய்க் கணக்கிடப்பட்டிருந்த போதிலும் தென்னைப்பயிரின் விஸ்தீர்ணம் மேல் குறிப்பிட்ட ஜில்லாக்களில் அதிக வித்தியாசப்படுகிறது. வட ஆற்காடு ஜில்லாவும் சித்தூர் ஜில்லாவும் அநேகமாய் மேல் சொன்ன விஷயங்களில் ஒன்றாயிருந்த போதிலும் இப்பயிரின் விஸ்தீரணம் ரொம்பவும் வித்தியாசப்படுகிறது. ஆனால் இரண்டொரு முக்கிய விஷயங்கள் இவ்விஸ்தீர்ண வித்தியாசங்களுக்குக் காரணமாய் இருக்கக் கூடுமென்று சொல்லக்கூடும். அதாவது சமுத்திர மட்டத்திற்கு மேல் சில உயரம் வரைதான் தென்னைப் பயிர் சரியானபடி சாகுபடி யாகுமென்பது தான். நீலகிரி ஜில்லாவில் சாதாரணமாய் கொஞ்ச விஸ்தீரணம் கூட இப் பயிரிலில்லை. அனுபோகத்திலும் ஜாஸ்தி உயரமுள்ள மலைப்பிராந்தியங்களில் இப்பயிர் செய்யப்படுவதுமில்லை. இத்துடன் தண்ணீர் வசதிகளுள்ள சமதளப் பிராந்தியங்களில் இப் பயிர் ஜாஸ்தி விஸ்தீர்ணத்தில் சாகுபடியாயிருக்கிறதாக ஊகிக்கலாம். ஆற்றுப்பாசன வசதிகளுள்ள கோதாவரி, தஞ்சாவூர் ஜில்லாக்களிலும், வட ஆற்காடு ஜில்லாவிலும், மழைப்பதம் ஜாஸ்தியாய் கிடைக்கக் கூடிய மேல் கரை ஜில்லாக்களாகிய மலையாளம், தென்கன்னடம் ஜில்லாக்களிலும் இப் பயிரின் விஸ்தீர்ணம் ஜாஸ்தியாய்க் காணப்படுகிறது.ஆனால் மேல்கரை ஜில்லாக்களிலோ இப்பயிருக்கு ஜலம் பாய்ச்சும் வழக்கமில்லையென்பது நன்கு விளங்குகிறது. கோயம்புத்தூர், சேலம், திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களில் இப் பயிருக்கு ஜல மிறைத்து சாகுபடி செய்கிறார்கள்.

விவசாய டிபார்டுமெண்டார் சென்றஐந்தாறு வருஷக்காலமாய்த் தென்னை சாகுபடியில் சில விஷயங்களைப் பரீட்சை செய்து அதைக் குடிகளுக்கு சிபார்சு செய்து கொண்டிருக்கிறார்கள். தென்கன்னடம் ஜில்லாவில் நீலேஷ்வர் என்னும் இடத்திலும், பில்லிக்கோட் என்னும் இடத்திலும் 1918—1919-ம் வருஷங்களில் சோதனைக்காக பண்ணைகள் ஸ்தாபித்துப் பரிட்சைசெய்து வந்து கொண்டிருக்கிறார்கள். மலையாளத்திலும் பண்ணைகள் ஸ்தாபித்து பரீட்சை செய்து

வருகிறார்கள். விவசாய டிபார்டுமெண்டார் பரீட்சை செய்து பார்த்தது எவ்விஷயத்தைக் குறித்து என்றால், சாதாரணமாய் தென்னை சாகுபடியில் தென்னை மரங்கள் நட்டு சில வருஷங்களுக்காவது அவைகளுக்கு வெயில் காலங்களில் தண்ணீர் கட்டி வந்தால் தான் அவைகள் வளர்ந்து மாசூல் கொடுக்கும்; இல்லாவிட்டால் கொடுக்காது என்று கிருஷிகர் சொல்லிக் கொண்டிருக்கும் அபிப்பிராயம் சரியல்ல வென்பதை நிரூபிப்பதற்காகத்தான். வெயில் காலங்களில் நட்ட தென்னை மரங்களுக்கு தண்ணீர் கட்டாமலே சாகுபடி செய்து நல்ல பலன் விவசாய டிபார்ட்மெண்டார் அடைந்திருக்கிற விஷயம் குற்றாலம் மேல்கரை ஜில்லாக்களாகிய மலையாளம், தென் கன்னடம் ஜில்லாக்களில் நிதர்சனப் படுத்தி யிருக்கிறார்கள். அதாவது பயிர் நடு முன்னேயே நிலத்தை ஆழ உழுதாவது அல்லது கொத்தியாவது செடிகளை நட்டு மழையின் உதவியினாலேயே வளரச் செய்திருக்கிறார்கள். மழை காலத்தில் மழை பெய்து கெட்டிப்பட்டு இருகிப்போகும் மண்ணை அப்போதைக்கப்போது கிளரிக் கொடுத்து பொசு பொசுப் பாக்குவதுடன் பூமிக்குள்ளிருக்கும் மழையின் உதவியால் கிடைத்த ஈரம் சூரிய வெப்பத்தினால் ஆவியாய் மேலே ஓடி விடாதபடி மேல் மண்ணை அடிக்கடி மழையில்லாக் காலங்களில் உழுது அல்லது கொத்திக் கொண்டிருந்தால் மண்ணின் கீழ் இருக்கும் ஈரம் தென்னை மரங்களின் வேர்களால் உபயோகப் படுத்தப் பட்டு செடிகள் வளர ஏதுவாகிறது. தென் கன்னடம் ஜில்லாவில் இவ்விஷயத்தை ஜனங்களுக்குப் பரிட்சார்த்தமாய் நிரூபிக்க 140 நிரூபிக்கும் பண்ணைகள் ஆங்காங்கு தெரிந்தெடுத்து டிபார்டு மெண்டார் மேல் பார்வையி லிருக்கின்றன. இவைகளில் ஒன்றுதான் கவர்ன்மெண்டார் ஆதரணையி லிருக்கிறது. 17 பண்ணைகள் லோக்கல் போர்டார் ஆதரணையி லிருக்கின்றன. மீதி பண்ணைகளெல்லாம் கிருஷிகரே அவர்களுடைய செலவில் வைத்திருக்கிறார்கள். லோகல் போர்டாருடைய ஆதரவில் வைத்திருப்பது முசாபரி பங்களா காம்பவுண்டுகளிலும் ஜில்லா போர்டு ஆபீஸ்களின் கம்பவுண்டு களிலும் ஸ்தாபனம் செய்திருக்கிறார்கள். இவ்விஷயத்திற்காக பில்லக்கோட்டில் ஸ்தாபித்திருக்கும் சர்க்கார் பண்ணையில் 1913-ம் வருஷம் நட்டு ஒரு துளி ஜலம் கூட வெயில் காலங்களில பாய்ச்சாமல் ஆழ உழுது மேல் மண்ணை அடிக்கடி கிளரிவிட்டுக் கொண்டு மாத்திரம் வந்த மரங்களில் 100க்கு 32 மரங்கள் இப்போதே காய்த்துக் கொண்டிருக்

கிறது. 1919-ம்வருஷம் நட்டமரங்களில் 100க்கு 25 மரங்கள் புஷ்பித்திருக்கின்றன- நிலேஷ்வர் சர்க்கார் பண்ணையிலோ 1918ம் வருஷத்தில்நட்ட செடிகளில்-100க்கு 61 செடிகளும் 1919ம் வருஷத்தில் நட்ட செடிகளில் 100-க்கு 45-செடிகளும் புஷ்பித்து காய்த்துக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரி பலன்களை ரூபுருபில் பார்த்தும் நிதர்சனை பண்ணைகளில் செடிகள் வளரும் வீரியத்தையும் பார்த்தும் ஜனங்கள் தரிசாய்க் கிடக்கும் காலி நிலங்களில் சென்ற ஆறு வருஷங்களுக்குள் மலையாளத்தில் 6000 ஏக்கருக்களும் தென்கன்னடம் ஜில்லாவில் 3000-ஏக்கருக்களும் ஜாஸ்தி பயிராக்கி யிருக்கிறார்கள்.

"நின்று தளரா வளர்தெங்கு தாளுண்டநீரைத்
தலையாலே தான் தருதலால்"

எனச் சொல்லியிருக்கும் மொழிப்படி தென்னை மரங்களுக்கு எவ்வளவு ஜலம் கிடைக்கிறதோ அஜ்ஜலத்தை அம்மரங்கள் பிரதியுபகாரமாய் காய்களின் மூலமாய்த் திரும்பவும் ஜனங்களுக்குத் தந்து உபயோகமாகிற தென்ற விஷயத்தை எண்ணி, கிருஷிகர் தென்னைக்கு நிறையஜலம் கட்டும் வளக்கமிருக்கிற தென்று தெரியவருகிறது. மேல்கரை ஜில்லாக்களில் வருஷத்திற்கு சுமார் 140 செமீ மழை பெய்கிறது. ஆனால் கீழ்கரை ஜில்லாக்களிலே, 40-முதல் 60-செமீ மழைதான் பெய்கிறது. இப்படி 40-முதல் 60-செமீமழை பெய்யும் இடங்களில்கூட 140செமீ மழை பெய்யும் மேல்கரை ஜில்லாக்களில் செய்யும் பருவம் செய்வது பொருந்துமாவென நம்மை அநேகர் கேட்டிருக்கிறார்கள்-மழையினால் பூமிக்குள் இறங்கிய மழைத் தண்ணீரை ஆவியாய்ப்போக வொட்டாமல் அடிக்கடி மண்ணைக் கொத்திக்கிளறி கீழ்மண்ணிலிருக்கும் ஈரத்தை பந்தோபஸ்து படுத்தினால் அந்த ஈரத்தின் உதவியால் செடிகள் வளர்கிற தென்பது மறுக்கக் கூடாத விஷயம். விவசாய டிபார்ட்டுமெண்டார் இவ்வித ஆராய்ச்சிகள் செய்து பார்க்கு முன்னமேயே செங்கல்பட்டு, தென் ஆற்காடு ஜில்லாக்களில் இடைக்கநாடு என்று சொல்லப்பட்ட இடங்களில் தென்னை மரங்களுக்கு ஜலம் பாய்ச்சாமல் இவ்விதம் பயிரிட்டு பலனடைந்து வருகிறார்கள். ஆகையால் எல்லா இடங்களிலும் இவ்வாறு செய்தால் பலனடையக் கூடுமென்றே நம்புகிறோம். தென்னை மரங்கள் வைத்திருக்கும் நமது சந்தா நேயர்கள் இவ்விதம் தங்கள் தங்கள் மரங்களில் பரீட்சை செய்து பார்த்து தத்தம் அனுபோகங்களைக் "கிருஷிகன்" வாயிலாக வெளியிட்டால் பேருபகாரமாயிருக்கும்.

The cultivation, preparation and utilisation of the Groundnut.

(Translated from the quarterly bulletin of the Imperial Institute - London. Page 291 October 1925).

மணிலாக் கொட்டை சாகுபடி, செய் நேர்த்தி உபயோகம் முதலியன.

(ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்ப்பு.)

முன்னுரை:— லண்டன்மா நகரில் வெளியாகும் "புல்லட்டின் ஆப் தி இம்பீரியல் இன்ஸ்டிடூட்" என்னும் 1925-ம் வருட அக்டோபர் மாதப் பிரசுரத்தை யான் கண்ணுற்றேன். அதில் மணிலாக் கொட்டையைப்பற்றி நீண்டதோர் வியாசம் யாவரும் எளிதில் உணரும்படி மிக விரிவாய் வரையப் பட்டிருந்தது. அவ்வியாசத்தை நான் பூராவும் படித்து முடித்த பிறகு அதில் அடங்கி யிருக்கும் அநேக விஷயங்களை நமது நாட்டினர் அறிவதற்கு அவரவர்கள் தாய் பாஷையில் இல்லையே என சிந்தித்து மிகவும் வருந்தினேன். ஆனால் "கிருஷிகன்" சஞ்சிகையை நினைவு கூர்ந்தவுடன் எனது வருத்தம் ஒருவாறு தணிந்தது. ஆங்கில மறியா விவசாயச் சகோதரர்களான பல சந்தாநேயர்கள் படித்துப் பயன் பெற வேண்டுமென கருதி இவ்வியாசத்தைத் தமிழில் மொழி பெயர்த்துக் கிருஷிகன் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டுமென்ற அவா வென்னை மிகவும் தூண்டிற்று. அதன் பயனாக எனது எண்ணம் செய்கை அளவாக மாறிற்று. இவ்வியாசத்தில் சில முக்கியமல்லாத பாகங்களை மாத்திரம் நீக்கி மற்றவைகளை அப்படியே மொழி பெயர்க்கப்பட்டது. இச் செய்கையில் குற்றங் குறைகளிருப்பின் கற்றோர் திருத்துமாறு கோருகிறேன்.

மொழி பெயர்ப்பின் சாராம்சம்:—

மணிலாக் கொட்டையைப் பற்றி அதிகத் தகவல்களைத் தெரிவிக்க வேண்டுமென உலகத்தின் பல பாகங்களிலிருந்து கேழ்க்கப்படுகின்றமையால் ஏற்கனவே கிரகித்திருந்த பல விஷயங்களோடு தற்போது சேகரித்த தகவல்களையும் சேர்த்துப் பிரசுரிக்கப்பட்ட வியாசச் சுருக்கம் கீழ்கண்டவாறாகும்:—

Extent of cuitivation:-மணிலாக் கொட்டைப் பயிரிடும் பரப்பு:—

வேர்க்கடலை என்று அழைக்கப்படும் மணிலாக் கொட்டை உலகத்தின் அநேக பாகங்களில் வெள்ளாமைச் செய்யப்படுகிறது. முக்கியமாய் உஷ்ணாந்தர ரேகைக்குள்ளுள்ள(Equator)எந்தப் பிரதேசங்களிலும், அதற்குச் சற்று குறைந்த உஷ்ணமுள்ள நாடுகளிலும் மணிலாப் பயிர் நன்றாக வளர்கிறது. வேர்க்கடலை எக்காலத்திலும் தின்பதற்கு உபயோகப்படுவதினாலும், பிரதானமாய் அக்கொட்டைகளிலுள்ள எண்ணெய் சத்துவினாலும், அதனால் கிடைக்கும் புண்ணாக்கு கால் நடைகளுக்கு உணவாகவும் பயிர்களுக்கு எருவாகவும் உபயோகமாவதினாலும் நல்ல இலாபகரமான பயிரென்றறிந்து வெள்ளாமைச் செய்யப்படுகிறது.

உலகத்தில் மணிலாவைச் சிரேஷ்டமாகப் பயிரிடும் முக்கிய பாகங்கள்; இந்தியா தேசம், இந்தோசைனா, ஜப்பான், ஜாவா, வட அமெரிக்காவின் (South Atlantic states) தென் அட்லாண்டிக் மாகாணங்களில் உள்ள வர்ஜீனியா, டென்னஸ்ஸி, கரோலினாஸ், ஜார்ஜியா, மெக்ஸிகோ, பிரேசில், ஆர்ஜன்டைன், ஆப்பிரிக்காவின் மேற்கெல்லை, கீழ் ஆப்பிரிக்கா, மெடகாஸ்கர், அல்ஜீரியா, ஈஜிப்டு முதலிய தேசங்களாகும். ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஸ்பெயின் தேசத்திலும், ஸிஸிலி என்னும் நாட்டிலும் இப்பொழுது இப்பயிர் செய்கைக்கு வந்திருக்கிறது. ஆஸ்டிரேலியா, தென் ஆப்பிரிக்கா, ரொடீஸியா, சூடான், பர்மா, முதலிய தேசங்களில் தற்போது தான் இப்பயிர் அதிகமாய் பரவுகிறது. உலகத்தில் விளையும் மணிலாக் கொட்டையின் மகசூல் கணக்கெடுக்கின் அது அபாரமாயிருக்கும். உற்பத்தி ஸ்தானங்களிலேயே அவைகள் ஏராளமாய் தின்பதில் செலவாகி விடுகின்றமையால் மொத்தம் மகசூல் சரியான கணக்கிற்கு வருவது அசாத்தியம். இருந்த போதிலும் உலகத்தில் வியாபாரத் தோரணையில் ஏற்றுமதியாகும் கணக்கின் மூலம் இவ்வளவு தான் உற்பத்தியாயிற்று என்று தோராயமாகச் சொல்லலாம். 1924-ம் வருடக் கணக்கின்படி ஏற்றுமதியான கொட்டைகளின் எடை சுமார் 8,00,000 டன் ஆகும். இவ்வளவையும் ஏற்றுமதி செய்தவை, இந்தியா, ஆப்பிரிக்காவின் மேற்கெல்லை, காம்பியா, செனிகால், கீழ் ஆப்பிரிக்கா, சைனா இந்நாடுகளாகும், அவற்றுள் முதன்மை பெற்றது இந்தியாதேசம். அமெரிக்காவின் ஐக்கிய நாட்டிலும், ஸ்பெயின் தேசத்திலும் ஏராளமாய்

விளையும் பயிரத்தனையும் அத்தேசத்தினர் பலவகை உணவுப் பொருள்களாக மாற்றித் தின்றுவிடுகிறார்களாகையால் அத்தேசங்களிலிருந்து அதிக ஏற்றுமதி கிடையாது. 1924ம் வருடத்தில் ஏற்றுமதியான கொட்டைகளைக் கீழ்கண்ட நாடுகள் விலைக்குப் பெற்றுக் கொண்டன :—

பிரான்ஸ் தேசம்	5,30,000	டன்	இதனால் எங்நாட்டினர்கள் மணிலாப் பயறுகளை அதிகமாய் வாங்குகிறார்களெனத் தெரிகிறது.
United Kingdom (ஐக்கிய நாடு)	1,00 000	,,	
ஜெர்மனி	75 000	,,	
ஹாலந்து	65,000	,,	
இதாலி	26,000	,,	
	7,96,000	,,	

ஒரு டன் என்பது 2240 இராத்தல் இடை (ப. ர.)

The Groundnut plant— மணிலாச் செடி:

இப்பொழுது வியாபாரத்தில் வழங்கிவரும் மணிலா வானது ; பட்டாணி கொட்டை என்றும் (Peanut) கூபர் பட்டாணி, நிலக்கடலை, குரங்குக் கொட்டை, பிண்டார், மணிலாக் கொட்டை, சைஞ பாதம், வேர்க்கடலை, என்றும் பல தேசங்களில் பலவகையான பெயர்களோடு அழைக்கப் படுகிறது. தாவர நூல்படி இம் மணிலாவை ஆங்கிலத்தில் அராக்கிஸ் ஹைபோஜியா (Arachis Hypogea) என்று அழைக்கப்படும். இச் செடி சுயேச்சையாக எங்கும் வளருவதாகத் தெரியவில்லை. இதனுடைய பூர்வீகம், எந்நாட்டில் முதன் முதல் தோன்றி எவ்விடம் முதலில் பரவிற்றென்பதும் திட்டமாகச் சொல்வதற்கில்லை. ஒருவாறு ஆராய்புமிடத்து இது தென் அமெரிக்காவின் உஷ்ணப் பிரதேசத்தில் முதலாவதாக உற்பத்தியானது என்று யூகிக்கலாம். ஏனெனில் அப்பிர தேசத்தில் இதைச் சார்ந்த ஓர் வகைச் செடி தானாக வளருகிறது. இதை இம் மட்டோடு நிறுத்துவாம். இனி இச் செடியைப் பற்றிய தாவர நூலாராய்ச்சியைக் குறித்து இங்கு மிக விஸ்தாரமாய் வரைவதை நீக்கி மிகவும் முக்கியமான சிலவற்றைக் கூறிப் போவாம்.

இது லேசாய்ப் படருஞ்செடி. இதனுடைய இலைகள் சூரிய வெளிச்சத்தில் திறந்தும், இருட்டில் ஒன்றோடொன்று மூடிக் கொண்டும் தூக்கும் பாவனையிலிருக்கும். தினுசுக்குத் தகுந்தவாறு

செடிகள் ஒரு அடிமுதற் கொண்டு மூன்றடிவரையிலும் படரும். இதில் அநேக தினுசுகள் உளவெனினும் இதை இரண்டு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, குத்தாக வளரும் தினுசு ஒன்று, படர்ந்து வளரும் தினுசு மற்றொன்று-மணிலாச் செடியில் புஷ்பிக்கும் பூக்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படும். அவையாவன:- 1. புட்பங்கள் பூர்த்து இலைகளின் பரப்பிற்குமேல் வந்துச் சற்று தூரநின்று நோக்கினும் கண்களுக்கு நன்றாகத் தோன்றுவது, இவைகள் மலட்டுப் புஷ்பங்கள். 2. இரண்டாவது வகையானது காய்பிடிக்கக் கூடிய நல்ல புஷ்பங்கள். அவைகள் செடிகளின் கீழ் பாகங்களில் புஷ்பிக்கும். இலைகளால் மறைக்கப் படுகின்றமையால் அவை மேற்பார்வைக்கு நன்றாக விளங்காது. காய்பிடிக்கக் கூடிய பூக்கள் மலட்டுப் புஷ்பங்களை விட அதிகமாய்ப் பூர்க்கும். உருவிலும் சற்று சிறியவைகளாய் இருக்கும்.

மணிலாச் செடிபூவின் இயற்கை யமைப்பு மிகவும் விசித்திரம். இந்தப் புஷ்பத்திற்குக் காம்பு கிடையாது. ஆனால் காம்புபோல் தோன்றுவது எதுவெனின் புட்பத்தின் "கலசம்" ஆகும் (Calyx) இது குழாய் போல் முக்கால் அங்குல நீள முள்ளது. இதைத்தான் புட்பத்தின் காம்பு என்று பலர் தவறாக எண்ணுகிறார்கள். இப்படிக்குழாய் போலுள்ள (Calyx) "கேலிக்ஸ்" என்று சொல்லப்படும் பூவினுடைய கலசத்திற்குள தான் (Ovary)"ஒவரி "என்று கூறப்படும் அண்டாசயம் இயற்கை விசேடத்தால் கருவுற்ற பிறகுதான் புட்பத்திற் குடைய காம்பானது தோன்றி இரண்டு மூன்று அங்குல நீளம் வரை வளருகிறது. அப்படி வளரும்போது கருவுற்ற அண்டாசயம் காம்பின் நுனியில் இருக்கும். அக்காம்பிற்கு இயற்கைஅமைப்பில் கீழ்நோக்கி அதாவது பூமியை நோக்கி வளரும் சக்தியுண்டு. காம்பானது கீழ் நோக்கி வளருங்கால் அதன் நுனியில் உள்ள கருவை பூமிக்குள் செல்ல எவ்விதத்தி லேனும் தடைப்பட்டால் மணிலாக் கொட்டை உண்டாகாதென்பது பிரத்தியட்சம். இக்காரணம் பற்றி அதிகமாகுலைப் பெறவேண்டில் பூமியை எவ்வளவு நன்றாக உழுது மிருதுவாய்ப் பண்படுத்த வேண்டுமென்பது உணரக்கிடக்கிறது.

காய்கள் முற்றின பிறகு அவைகளுக்குள் ஒன்றுமுதல் நான்கு கொட்டைகள் வரையிலிருக்கும். இதுசெடிகளின் தினுசைப்பொருத்தியது. சாதாரணமாய் இரண்டு கொட்டைகள் உள்ள

காய்கள் தான் சகஜம். இச் செடியின் வேர்ப்பாகத்தில், சிறிய கொப்புளங்களைப் போல் சுற்றிலும் கிளம்பி வேரை யொட்டிப் பலமுடிச்சுகள் காணப்படும். இவைகளை (Bacterial Nodules) பாக்டீரியல் முடிச்சுகள் என்று சொல்லுவார்கள். இவை மண்ணுடன் கலந்துள்ள கண்களுக்குப் புலப்படாத அதி நுட்பமான சிற்றுயிர்களால் வளருகின்றன. இவைகளுக்கு ஆகாயத்திலிருக்கும் (free Nitrogen) என்னும் சுத்த "தர்க்கியசம்" என்கிற வாயுவை தன்னிடத்தில் இழுத்து பூமியில் நிறுத்தும் சக்தியுண்டு. அவ்விதம் தன்னிடத்தில் கிரஹித்தவாயுவை செடிகளுக்கு வேண்டிய உணவாக மாற்றி அப்பயிருக்கு உபயோகமாகும்படிக் கொடுக்கின்றன. இதுகாரணம் பற்றியே மணிலாப்பயிர் தழைச் சத்தைக் கொடுக்கக் கூடிய உணவை நிலத்திலிருந்து அதிகமாய் எதிர் பார்ப்பதில்லை. இதனால்தான் மணிலாப் பயிரை அதிகத் தழைச் சத்து இல்லாத மேடான பூமிகளிலும்கூட வெள்ளாமை செய்ய முடிகிறதென்று அறியக் கிடக்கிறது.

(தொடரும்)

ஆ. சு. நித்ய கல்யாண ரெட்டி.

பயிருணவு

(10-ம் புத்தகம் 14-ம் பக்கத் தொடர்ச்சி)

PLANT FOOD—(Continued from page 14 of Vol. X)

முன் சஞ்சிகைகளில் பூலோகத்தில் 67 மூலப் பொருள்களிருக்கிறதென்றும் அவைகளில் விவசாய சம்மந்தமாய், மண், செடி மிருகங்களுக்கு சம்மந்தப்பட்டவைகள் அனேகமாய் 14 அல்லது 15 தான் என்றும் சொல்லியிருக்கிறது ஞாபகமிருக்கும். இவைகள் பகுப் பொருள்களாகவும் பகாப் பொருள்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும் சொல்லியிருக்கிறது. மூலப் பொருள்கள் உலோகப் பொருள்களென்றும், உலோகங்களல்லாதவை யென்றும் இரண்டு விதப்படும். பொன், வெள்ளி, ஈயம், தாம்பிரம் துத்த நாகம், பொட்டாசியம் (Potassium) ஸோடியம் (Sodium) கால்ஷியம் (Calcium), மக்னீஷியம் (Magnesium), அலுமினியம் (Aluminium), நிக்கல் (Nickel) அல்லது வெள்ளைச் செம்பு, பாதரசம் முதலியவைகள் உலோகப் பொருள்களுக்கு உதாரணம். உலோக வஸ்துக்கள் சாதாரணமாய் அவைகளிலுள்ள பளபளப்புக் கொடுத்து மின்னும் குணத்தினால் சுலபமாய்க்கண்டு பிடிக்கக்கூடும். பிராண

வாயு, (Oxygen), ஜலகர வாயு (Hydrogen), நைடிரஜன் (Nitrogen) என்னும் வெடியுப்புவாயு, குளோரைன் (Chlorine) என்னும் இலவண மூலம், கரிமூலம், கெந்தகம், பாஸ்நரம், மூலமணல் (Silica) முதலியனவைகள் உலோகங்க ளல்லாதவைகள். உலோகங்கள் அல்லாத வஸ்துக்களுக்கு பளபளப்பான மின்னும் குணம் கிடையாது. உலோகங்க ளல்லாதவைகளில் முன் சஞ்சிகையில் பிராண வாயு (Oxygen), ஜலகர வாயு (Hydrogen), நைடிரஜன் (Nitrogen) வெடியுப்பு வாயு, கரிமூலம் ஆகிய நான்கு உலோகங்க ளல்லாத வஸ்துக்களைக் குறித்துப் பேசினோம். இவைகள் இந்திரிய வஸ்துக்கள் என்றும் பெரும்பான்மை ஆகாயத்திலிருந்து கிடைக்கும் நான்கு மூலப் பொருட்கள் என்றும் விவரித்திருக்கிறோம். இத்தடவையில் ஒரு தாவர அல்லது ஜீவவர்க்சப் பொருளை எரித்தால் அதிலிருந்து கிடைக்கும் சாம்பலில் காணப்படும் மூலப் பொருள்களைக் குறித்துக் கவனிப்போம். இவைகளில் சென்ற சஞ்சிகையில் உலோகங்களல்லாத வஸ்துக்களைக் குறித்து நாம் ஆரம்பித்திருப்பதால் அப்பகுதியின் மீதப் பொருள்களைக் குறித்து இப்போது கவனிப்போம்.

(a) குளோரயின் என்னும் லவண மூலவாயு அல்லது இலை பச்சை வாயு. இது ஜல வாயுவுடன் கலந்தால் உப்புத் திராவகம் அல்லது லவணத் திராவகமாகும். லவண காரத்துடன் இவ்வஸ்து கலந்தால் நாம் சாப்பிடும் கரியுப்பு ஆகிறது. இவ்வாயு மஞ்சள் நிறப் பச்சை வர்ணமுடையது. இதை சற்று மோந்து பார்த்தாலும் கூட தொண்டைப் புண்ணும் புகைச்சலு முண்டாக்கும். இவ்வாயு பூ மண்டலத்தில் சுயம்புவா யிருப்பதே கிடையாது. இந்த வாயுவின் முக்கிய குணம் ஒரு வர்ணத்தை பூராவும் வெளுக்கச் செய்யும் குணம்.

(b) கெந்தகம்—இது எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த வஸ்து. கடைகளில் இது நெல்லிக்காய் கெந்தகமென்று சிறு சிறு துண்டுகளாகவும், குளல் கெந்தகம் என்று நீண்ட சாதாரணமான குளல்கள் மாதிரியாயும் விற்கப்படுகிறது. இது வெளுப்புமஞ்சள் நிறமுடைய சரக்கு. ஒடித்தால் ஒடியக்கூடிய வஸ்து. தண்ணீரில் கரையக் கூடாத குணமுடைய வஸ்து. ஒரு சிறு கெந்தகக் கட்டியையாவது துண்டையாவது ஒரு தகரத் தட்டில் வைத்து எரித்தால் அது சற்று நீலவர்ணத்துடன் எறிந்து கெட்ட நாற்றத்தை யுண்டாக்கும். இது பிரபஞ்சத்தில் சுயம்பு ரூபமாயிருப்பது அபுரூபம். தாவர ஜீவ

வர்க்கங்களில் இவ்வஸ்து லேசாய்க் கலந்து கொள்ளும் குண முடையது. சாதாரணமாய் கடையில் விற்கும் நெருப்புப்பெட்டிகளில் இருக்கும் தீக்குச்சிகளைக் கிச்சும்போது ஓர்வித நாற்றம் உண்டாவது எல்லாருக்கும் அனுபவத்தில் தெரிந்த விஷயம். இந்த நாற்றம் தீக்குச்சுகளில் தடவியிருக்கும் கெந்தகம் எரிவதால் உண்டாகின்றது. கெந்தகமும் பிராண வாயுவும் கலந்தால் கெந்தகத் திராவகம் உண்டாகிறது. மயில்துத்தம் அல்லது துருசு, அன்னபேதி முதலிய வஸ்துக்களெல்லாம் கெந்தகத்தின் செயற்கைப் பொருட்கள் தான்.

(c) பாஸ்கரம்.—இது கெந்தகத்தைப் போல் சுயம்பு வாய் பூலோகத்தில் சாதாரணமாய்க் கிடைப்பதில்லை. சுயம்புவா யிருக்கும் போது இது ரூபத்தில் வெள்ளை நிறமான மெழுகு எப்படி யிருக்குமோ அப்படியே தோன்றும். இது பிராண வாயுவுடன் சுலபமாய் கலந்து கொள்ளும் குண முடையது. ஆகையால் சுயம்பு ரூபமாயிருக்கும் போது தண்ணீருக்குள் போட்டு வைக்கா விட்டால் புகையும் குணத்தை யுடையது. சுயம்பு பாஸ்கரம் இருட்டில் பிரகாசத்தைக் கொடுக்கும். நெருப்புக் குச்சிகளை ஒரு சரசரப்பான வஸ்துவில் தேய்த்த உடன் நெருப்புப்பற்றும்படி அக்குச்சிகளின் நுனியில் பாஸ்கரம் வைக்கப் பட்டிருக்கிறது. நெருப்புப் பற்றியபின் அது அவிந்து போகாமல் எறிவதற்காக நெருப்புக்குச்சிகளின் நுனியில் கெந்தமும் தடவப்பட்டிருக்கிறது. எந்த பிராணியின் எலும்பிலும் பாஸ்கரம் பிராண வாயுவுடனும் சுண்ணாம்புடனும் ஐக்கியப்பட்டு விசேஷமா யிருக்கிறது. இது பிராணிகளின் மாம்ஸம் ரத்தம் பால் முதலியவைகளில் ஒரு பிரதானமான கலப்புப் பொருள். இது எரிமலையினால் உண்டாகும் பாரைகளிலும் வேறு சில வகுப்பு பாரைகளிலும், பிராண வாயு, சுண்ணாம்பு, மக்னீஷியம் போன்ற வஸ்துக்களுடன் கலந்திருப்பதால் அப்பேர்ப்பட்ட பாரைகள் உடைந்து தகர்ந்து மணல் ரூபமாய் மாறும்போது செழிப்பான நிலங்களாகின்றன. ஸ்தாவர ஜீவவர்க்கங்களால் உபயோகப்படுத்தப்பட்ட எல்லாவித உணவுகளிலும் இது ஒரு முக்கிய கலப்பு வஸ்துவா யிருக்கிறது. பிராணிகளின் பிருதுவான இடத்தில் உள்ள பாஸ்கரம் எலும்புகளில் உள்ள பாஸ்கரத்தைப் பார்க்கிலும் பயிரின் போஷிப்புக்கு அதிக சீக்கிரத்தில் உபயோகப்படும் படியான ஸ்திதியிலிருக்கிறது. செடிகளில் மற்ற உருப்புகளைப் பார்க்கிலும் விதைகளில் பாஸ்கரம் ஜாஸ்தியாய் உண்டு. எள்ளு, வேப்பம், புங்கம், ஆமணக்கு, வேர்க்கடலை முதலியவை

போன்ற வித்துக்களில் உள்ள பாஸ்காம் எண்ணை ஆட்டின பின் மீந்த புண்ணாக்குகளில் சேர்ந்திருக்கும். செடிகளில் பூ, காய், பழம், விரை, ஆகிய அங்கங்கள் அபிவிருத்தியாக பாஸ்காம் முக்கியமாய் வேண்டிய ஒரு பயிருணவு.

திருச்சினாப்பள்ளி ஜில்லா பெரம்பலூர் தாலூக்காவைச் சேர்ந்த ஊட்டத்தூர், கருடமங்கலம் முதலிய கிராமங்களில் பொறிவிளாங்காயைப்போல் ஏராளமாய் கற்கள் சிதருண்டிருக்கின்றன. அவைகள் மேலுக்கு வெண்மையாயும் உடைத்துப் பார்த்தால் கருநீல வர்ணமாயுமிருக்கும். அவைகளில் பாஸ்காம் கலந்த எருச்சத்து உண்டு. பிராணிகளின் பலங்களிலும் பாஸ்காம் உண்டு. நெல் உமியில் பாஸ்கரம் உண்டு. மீனில் பாஸ்காம் ஜாஸ்தி. (இன்னும் வரும்)

Cooperation:—Loans for building granaries.

கூட்டுறவு:- குதில்கள் கட்ட சர்க்கார் கடன் கொடுத்தல்

குதில்கள் கட்டுவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சர்க்காரார் கடன் கொடுப்பதைப் பற்றி 1927மூ மார்ச்சுமீ 21உ ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் சாராம்சம் பின்வருமாறு:— தற்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்கள் கொடுப்பதற்கே பெரும்பாலும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. இதைத் தவிர வேறு வித உதவிகள் புரிவதற்கு சர்க்காரார் கடன் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அப்பேர்ப் பட்ட இதரவிஷயங்களில் தற்காலம் கூட்டு நாணயச் சங்கங்களின் மூலமாய் அச்சங்கங்களின் அங்கத்தினர்களுடைய விளைபொருள்கள் ஈட்டின்பேரில் கடன் கொடுப்பதற்காக லட்சரூபாய் கடன் கொடுப்பதாய்த் தீர்மானித்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட கூட்டு நாணயச் சங்கங்கள் அங்கத்தினர்களின் விளைபொருள்களை அடமானம் வைத்துக்கொள்வதற்கும் விற்பதற்கும் ஸ்தாபிக்கப் பட்டால்தான் கடன் கொடுக்கப் படும். அதில் இவ்வருஷத்திய சர்க்கார் வரவு செலவு திட்டத்தில் 25000-ரூபாயும் அடுத்த இரண்டுவருஷங்களில் மீதி 75000-ரூபாய்களும் அதற்கென்று பிரத்தியேகமாய் நிறுத்தி வைக்கப்படும். முதலில் இக்கடன்கள் விளைபொருள்களைக் கட்டிவைப்பதற்காக வேண்டிய குதில்களைக் கட்டுவதிலேயே செலவிடப் படும். கடன்கள் கொடுப்பதற்கும் திரும்பப் பெறுவதற்கும் சாதாரணமாக பின்னால் சொல்லும் சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

சிலமுக்கியமான விதிகள்

கூட்டுறவு நாணயச் சங்கங்களின் விதிப்படி கூட்டுறவுச் சங்கங்களாகப் பதிவுசெய்யப் பட்டிருக்கும் சங்கங்களுக்கு மட்டுந்தான் கடன் கொடுக்கப்படும். அத்துடன் அவைகள் அங்கத்தினர்களின் விவசாயப் பொருள்களை, அல்லது விவசாயச் செய் பொருள்களை வாங்கி விற்பதற்காக ஏற்பட்டவைகளா யிருக்கவேண்டும். அல்லது அப்பேர்ப்பட்ட பல கிளைச் சங்கங்கள் அத்தலைமைச் சங்கத்துடன் இணைக்கப் பட்டாவது இருக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட சங்கம் கடன்பெற லாயக்கானதா அல்லவா வென்பதை கோஆபரேடிவ் சுசைடிகளின் ரிஜிஸ்டிரார்தான் தீர்மானிக்க உரிமைப்பட்டிருக்கிறார். அவருடைய தீர்மானம் முடிவானது தான். அதைப் பற்றி எவருக்கும் விவாதிக்க அதிகாரமில்லை.

குதில்கள் கட்டுவதற்கு ஏற்படும் மொத்த செலவில் பாதிபாகமாவது அல்லது அப்பேர்ப்பட்ட பாதிபாகம் 2500-ரூபாய்களுக்கு அதிகமாவதானுல் கூடரூ-2500 மாத்திரம் கொடுக்கப் படும். பாதிபாகம் 2500-ரூபாய்க்கு குறைவதா யிருந்தால் அப்படிக் குறைந்த பாகந்தான் கொடுக்கப்படும்.

ஆகவே ஒரு சங்கமானது எவ்வளவு பெருந்தொகை குதில்கள் கட்டுவதற்கு செலவிட்ட போதிலும் அதற்கு 2500-ரூபாய்க்கு அதிகம் கொடுக்கப்பட மாட்டாது. திருஷ்டாந்தமாக குதில்கள் கட்டுவதற்கு அச்சங்கத்திற்கு 3000-ரூபாய்கள் செலவானுல் ரூ1500-ம், பத்தாயிரம் ரூபாய்கள் ஷை விஷயத்திற்குச் செலவானுலகூடரூ 2500 மாத்திரமுந்தான் கொடுக்கப்படும். அத்துடன் முதலில் அச்சங்கத்தின் பாகத்திற்கு சங்கம் கொடுக்க வேண்டிய தொகை ஷை கட்டட வேலைக்குச் செலவு செய்தபின்தான் சர்க்கார் கடன் கொடுப்பதாய் ஒத்துக் கொண்ட தொகை கொடுக்கப்படும். மேலும் ஷை தொகைகள் சரியான பக்கா கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டும்தான் கொடுக்கப்படும்.

முதலில் அச்சங்கத்தார் கட்ட உத்தேசித்திருக்கும் குதில் கட்டட அமைப்பு திட்டமும் (Plan) அதற்குப் பிடிக்கக்கூடிய தோராயச் செலவும்(Estimate) தங்களுக்கு ஷை விஷயத்திற்கு வேண்டிய கடன் தொகையும் போட்டு சர்க்கார் கோஆபரேடிவ் ரிஜிஸ்டிரார் அவர்களுக்கு மனுச் செய்து கொள்ளவேண்டும். ஷை உத்யோகஸ்

தர் பார்த்து அங்கீகரித்த கட்டட திட்டம் எக்காரணத்தைப்பற்றியும் மேற்படி உத்தியோகஸ்தருடைய எழுத்து மூலமான உத்தரவன்றிப்பில் கூட்டியாவது குறைத்தாவது மாற்றியாவது கட்ட அனுமதி கொடுக்கப்பட மாட்டாது.

சர்க்காரார் நீங்கலாக சங்கத்தின் அங்கத்தினர்களல்லாத எவரிடமிருந்தும் எக்காரணத்திற்காகவாவது வாங்கிய ஒரு பைசாகூட ஷை கட்டட விஷயத்தில் செலவழிக்கக் கூடாது. இந்த நிபந்தனை சர்க்காரிடமிருந்து கடன் வாங்குவதானல் மட்டுந்தான் நிர்ப்பந்திக்கும்.

இப்படி சர்க்காரார் கொடுப்பதாய் ஒத்துக் கொண்ட கடனுது கட்டட வேலை முடிய முடிய சிலா சிலாவாகத்தான் கொடுக்கப்படும்.

ஒரு சங்கம் சர்க்காரிடமிருந்து முதல் தவணைக் கடன் வாங்கிய தேதி முதல் 6-மாதங்களுக்குள் ஒருகுதியிலோ அலலது பலகுதில்களோ முன தீர்மானித்த பிரகாரம கட்டி முடித்து விடவேண்டும்.

கோஆபரேடிவ் சுஸைடிகளின் ரிஜிஸ்டரார் அவர்கள் அபம்பாப் பட்ட சர்க்காரிடமிருந்து கடன வாங்கிக் கட்டிய கட்டிடத்தை இன்ஷூர் செய்ய வேண்டியது அவசியமென்று தீர்மானித்தால கட்டாயமாய் இன்ஷூர் செய்தே தீரவேணடும்.

வட்டியைப் பற்றியும், எப்படி திருப்பிக் கொடுப்ப தென்பதைப்பற்றியும், கோஆபரேடிவ ரிஜிஸ்டராருக்கு, மத்தியில் இன்னின்ன தவறுதல்கள் ஏற்பட்டால ரூபாய்கள நிறுத்தலா மென்பதைப்பற்றியும், வருஷாவருஷம் இவ்வளவு தொகை திருப்பிக் கொடுக்கப் பட வேண்டு மென்பதைப்பற்றியும், வருஷா வருஷம் கோஆபரேடிவ் ரிஜிஸ்டிரார பார்வையிட்டு அக்கட்டடம வைத்திருக்கும நிலைமையைப் பார்த்து ஒரு சர்க்கார் இஞ்சினியரை விட்டு விலை மதிப்பதைப் பற்றியும், இது போன்ற விஷயங்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி நமது சந்தாதாரர்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமில்லை யென்று இங்கு விவரிக்கவில்லை.

"ஜஸ்டிஸ்" கட்சி அதாவது நியாயக்கக்ஷி யென்று பேர் வைத்துக் கொண்டு, தங்கள் சுயநலத்திற்காக எவ்வளவு அக்ரமமான காரியமாயினும் சரி, அதைப் பற்றி அணுவளவும் அஞ்சாமலும் நெஞ்சு திடுக்கிடாமலும் செய்து வந்த கனம பனகால் ராஜா (ராஜா வென்ற

பேரைத் தவிர, ராஜாக்களுக்கிருக்க வேண்டிய ராணுவம் சற்றுவது இவருக்குக் கிடையாது) பிரதம மந்திரியா யிருக்கும் வரையில் எவ்வித பொது நலத்தையும் கொடுக்கக் கூடிய காரியங்கள் ஏற்படுமென்று நாம் திட்டமாய் எதிர் பார்க்கா விட்டாலும் இப்படிக் கடன் கொடுக்கும் முக்கியத்தையும் அதன் அவசியத்தையும் பற்றி "கிருஷிகன்" வாயிலாக எத்தனையோ முறை எழுதியிருக்கிறோம்.

ஸ்ரீமான் பனகால் ராஜா அவர்கள் பிரதம மந்திரியா யிருந்த காலையில் நடந்த ஓர் எலெக்ஷன் தாவாவில் ஹைகோர்ட் ஜட்ஜு கனம் ஜஸ்டீஸ் ஸ்குவாபீ துரையவர்களும், ஜஸ்டீஸ்வாலஸ் துரையவர்களும் சர்க்கார் வக்கீலைப் பஹிரங்கமாய்க் கோர்ட்டிற்கு வரவழைத்து அவ்வியாஜ்ஜியத்தில் கனம் மந்திரியவர்கள் செய்தது நியாய விரோதமான காரியமென்றும், அப்போதாவது அந்த அநியாயமான செய்கையை ரத்து செய்து நியாயமளிப்பது கௌரவமாயிருக்கு மென்றும் தாங்களபிப்பிராயப்பட்டு எழுதி யனுப்பும்படி சொன்னதாக எழுதச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன பிரகாரம் நியாயம் செய்தால், தன்னுடன் சேர்ந்த தன்னைப்போலொத்த சுய நலப்புலிக்கு கெடுதலாகுமென நினைத்து அவ்வாறு செய்ய மறுத்து விட்டார். நியாயக் கக்ஷியென்று பேர் வைத்திருக்கும் கக்ஷி *அநியாயக்கக்ஷி* யென்பதற்கு இதைவிட வேறு ஓர் அத்தாக்ஷியும் வேண்டுமோ?

நிற்க, கிருஷிகருக்கு பின்னைல் அதிக உபசாரத்தைக் கொடுக்கக் கூடிய இவ்விஷயத்திற்கு காரணகர்த்தாவா யிருந்தவர்களின்னாரென்று நமக்குத் திட்டமாய்த் தெரியாவிட்டாலும், தங்களாலியன்ற வரையில் எசெகபொது ஜன உபகாரமான காரியங்களாயிருக்கு மென்றும், அப்பேர்ப்பட்ட காரியங்கள் ஜனங்களுக்கு அதிக அவசியமானவைகளென்பதையும் ஆண்டறிவதற்காகத் தங்களாலியன்ற வரையில் எல்லோரிடமும் கலந்து பேசி ஆலோசித்து வரும் தற்காலத்திலிருக்கும் கனம் மந்திரிகளி லொருவ நடையகா யிருக்கலா மென்று யூகிக்கிறோம். பொது ஸ்தாபனங்களுக்குத் தக்கவர்களாகத் தெரிந்தெடுத்தனுப்புவது பொது ஜனங்களின் கடமை. பொதுஜனங்கள் எலெக்ஷன் காலங்களில் சுயநலம் கருதாது(அதாவது எலெக்ஷனுக்கு நிற்கும் சுயநலப்புலிகள் கொடுக்கும் சொற்ப ஊதியத்திற்காக ஆசைப் படாமல்) அந்தஸ்தானத்திற்கு நிற்பவர்களில் எவர் அந்த உத்தியோகத்தின் மூலமாய் சுயநலங்கருதி நிற்கிறாரென்றும் எவர்

பொது ஜனஉபகாரமாய் நிற்கிறவரென்றும் கவனித்து, பொதுஜன உபகாரிக்குத் தங்களது வாக்குரிமையை(ஓட்டைக்) கொடுப்பார்களானல்பொது நலப்பிரியர்களாகிய தக்கோர்களே பொதுஸ்தாபனங்களுக்குத் தெரிந்தெடுக்கப் படுவார்கள். அவர்களும் சுயநலங் கருதாது பொது நலத்திற்காகப் பாடு படுவார்கள். இவ்வித இருக்கிற குணவான்கள் எல்லாக் கக்ஷிகளிலும் இருக்கத்தான் செய்வார்கள். ஏன்? ஜஸ்டிஸ் கக்ஷியிலும் ஸ்ரீமான்கள் குமாரசாமி செட்டியார் முனிசாமி நாயுடு போன்ற பொதுநல உபகாரிக ளில்லாமலா யிருக்கிறார்கள்? இருக்கத்தான் செய்கிறார்கள். ஆகவே நாம் எந்தக் கக்ஷியையும் கவனித்து அக்கக்ஷியிற் சேர்ந்தவர்களைத்தான் தெரிந்தெடுக்கவேண்டுமென்று சொல்ல வரவில்லை. நாம் சொல்லுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். எக்கக்ஷியைச் சேர்ந்தவர்களாயினும் சரிதான். பொது ஜன உபகாரியா? அல்லது சுய நலப் புலியா வென்று கவனித்து மட்டும் ஓட்டுரிமை கொடுப்போமானால் இஷ்டமாய் பொதுஜன காரியங்கள் சரிவர நடக்கும். நாம் சொற்ப லாபமாகிய இரண்டு அல்லது ஐந்து ரூபாய்களுக்கு நமது ஓட்டுரிமையை விற்றால், நாது ஓட்டர்களுக்குச் செலவழித்த சில ஆயிர ரூபாய்களுக்குப் பதிலாக எவ்வழியிலாவது அவர்கள் பல ஆயிர ரூபாய்களைச் சம்பாதிக்க வழி தேடுகிறார்கள். ஆகையால் மந்திரிகளோ, ஜில்லா போர்டாரோ, தாலூக்கா போர்டு மெம்பர்களோ, முனிசிபல் அங்கத்தினர்களோ நல்லவர்களா யில்லாமலிருப்பதற்குக் காரணகர்த்தாக்கள் யார்?.

போது ஜனங்களே!

நிற்க, வட்டி குதில்களைக் கட்டி கிருஷிகருடைய தானியங்களை ஈடாகவைத்துக் கொண்டு கடன் கொடுத்து வருவதால் கிருஷிகருக்கு அமோக இலாபம் கிடைக்கும். எப்படி யென்றால் அறுவடைக் காலத்தில் சர்க்கார் கிஸ்தியின் நிமித்தம், தம்மால் வேர்வை சொட்ட விளைவிக்கப்பட்ட தானியங்களைமிகவும் குறைந்த விலைக்கு தற்காலம் கிருஷிகர்விற்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. ஆகையால்தான் அறுவடை காலத்தில் தானிய விலை சகாயமா யிருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களில் அவசரக்காரரெல்லாம் தானியங்களை விற்று விட்ட பின் தானியம் கட்டி வைத்திருப்பவர்கள் மாமூல்விலை கொடுத்தா லொழிய தானியங்களை விற்க மறுத்து விடுகிறார்கள். அப்போது மாமூல் விலை அவர்களுக்குக் கிடைக்கிறது. இது ஏறக்குறைய தானியங்களில் நூற்றுக்கு 12½முதல் 25க்குக் குறையாமலும்

கருப்புகட்டி, வெல்லம், பருத்தி முதலியவைகளில் 100க்கு 50க்குக் குறையாமலும் போகிறது. கிருஷிகருடைய விளைபொருட்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு அவர்களுக்கு அவசியமான தொகைமட்டும் கடன் கொடுத்தால், சகாயமான விலைக்கு விற்பவர்களிருக்க மாட்டார்கள். அப்போது ஆதி முதலே நியாயமான விலை எல்லோருக்கும் கிடைக்கும். அப்படிச் சரியான விலை பெறுவதால் கிருஷிகர் தற்காலம் பெறும் விலையைவிட 100-க்கு 12½ முதல் 50 வரை அதிக விலை பெறுவார்கள். அதனால் கடன் காராக வேண்டியமேறது குறைவாகும். நமது இராஜதானிக்கு ஒரு லட்ச ரூபாய் எவ்வளவு என்று சிலர் நினைக்கலாம். இந்த ஒரு லட்ச ரூபாய் குதில்கள் கட்டுவதற்காகமட்டும் செலவிடப்படு மென்பதை மறக்கலாகாது. பொது ஜன அபிமான முடைய மந்திரிகள் நீடித்து இருப்பார்களாயின் தானியம் கட்டிவைப்பதற்குப்பல லட்சங்களல்ல; கோடிக் கணக்காய் கடன் கொடுக்க ஏற்பாடுகள் செய்வார்களென்பதில சந்தேகமேயில்லை. முதலில் இச்சிறு தொகையாகிய ஒரு லட்ச ரூபாயை எவ்வாறு செலவிடுகிறார்களென்று கவனித்துப் பார்ப்பதற்கே பரீட்சார்த்தமாய்க் கொடுத்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்தார்களெல்லோரும், தங்கள் விதிகளை மேற்சொன்ன சகாயங்களேற்படுத்துவதற்குத் தக்க விதமாய்த் திருத்திக் கொண்டு தானியக் குதில்கள் போதுமான அளவு கட்டுவதற்கு வேண்டிய, கட்டட அமைப்புத்திட்டங்களும் (எஸ்டிமேட்டுகளும்) தோராய செலவுகளும கூடியஜலதியில அனுப்பி பொது ஜன உபகாரமான இக்காரியத்தைத் தீவிரவிருத்தி செய்வார்களென்றே நம்புகிறோம். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள். தூங்கி ஏமாறுதீர்கள்.

J. R. ரங்கராஜு

காலெண்டர் வரவு

தஞ்சாவூர் வாலெஸ் பிரிண்ட்டிங் அலுவலாரிடமிருந்து பிரபல ஜோஸ்த்து காலெண்டர் வந்தனத்துடன் வரப் பெற்றோம். ஷை காலெண்டரில் தமிழ் ஆங்கிலேய மாதங்களும் தேதிகளும் போடப் பட்டிருப்பதோடு பிரதி மாதத்திலும் அந்தந்த மாதத்திய பஞ்சாங்கமும் விவாஹசுபமுகூர்த்தங்களும் சகல தேச உத்ஸவாதிகளும் அச்சடிக்கப் பட்டிருக்கின்றன. இக்காலெண்டர் ஹிந்துக்கள் எல்லோருக்கும் அதிக உபகாரமாயிருக்கு மென்பதில் கிஞ்சிற்றேனு மையமில்லை. அடுத்த முறை கிளேஸ் காகிதத்தில் அச்சிடுதல் நலமென்பது எமது அபிப்பிராயம். ப. ர.

Royal Agricultural commission.

விவசாயக் கமிஷன்.

எதிர்பார்க்கப்படும் சிபார்சுகள்.

விவசாய ராயல் கமிஷன் தலைவரான லார்டு லின்லித்கோவும் வேறு சில அங்கத்தினரும் இங்கிலாந்துக்குப் பிரயாண மானுர்கள் மற்றவர்கள் சீக்கிரம் போவார்கள். வருகிற இலையுதிர் காலத்தில் இந்தியா முழுவதையும் பர்மாவையும் சுற்றிப் பார்க்கத் திரும்பி வருமுன் யாதாஸ்தின் பெரும் பாகம் எழுதப்பட்டிருக்குமெனப்பொதுவாக எதிர்பார்க்கப் படுகிறது.

மாகாணங்களில் நடக்கும் வேலையை ஒன்றுசேர்த்து, ஆராய்ச்சி முறையில் புதுவழிகளை எடுத்துக் காட்டாயல் புதப்பரீட்சை ஏதாவது செய்யவேண்டி வந்தால் அதற்கு வேண்டிய பணவுதவிசெய்து ஒழுங்கு படுத்துவதற்காக விவசாய ஆராய்ச்சி மத்ய போர்டு ஒன்றை கமிஷன் சிபார்சு செய்யுமென்று 'டைமஸ் ஆப் இந்தியா' எதிர்பார்க்கிறது. விவசாயிகள் கூட்டுறவு இயக்கத்தின் உதவியாலும், கோர்வையான பலவிவசாய பாங்குகள் ஏற்படுத்துவதாலும் சுலபமாய் கடன் வாங்கக்கூடிய ஒரு முறையையும் சிபார்சு பண்ணலாமென எண்ணப்படுகிறது.

லார்டு லின்லித்கோவிற்கு விளைபொருள்களை விற்பதற்கு வேண்டிய அதிக சவுகரியம் செய்வதில் நோக்கமுண்டு. இதற்கும் கடன் வாங்க அனுகூலம் செய்பலாம். கவர்ன்மெண்டின் பண்ணைக்குப் பதிலாக விவசாயிகளின் சொந்த நிலத்திலேயே நிரூபணை செய்து காட்டும்படி மாறுதல் ஏற்படலாம்.

சாட்சியம் வாங்கப்பட்டது ஏராளமாக இருக்கிறது. பணக்குறைவாலும், பொதுஜன ஆதரவு போதாததோடும் சென்ற 30 வருஷங்களாக இந்தியா முழுவதிலும் விவசாய இலாகாக்கள் செய்து வந்திருக்கிற முதல்தரமான வேலை சோபிக்காமல் இருக்கலாம். உத்தியோகஸ்தர்கள் கொடுத்த சாட்சியத்திலிருந்து விவசாய உத்தியோகஸ்தர்களுக்குச் சுவாதீனம் கொடுபடாமலும் இருந்ததாகத் தெரிய வருகிறது.

உத்தியோகஸ்தர் அல்லாதவர்களுடைய சாட்சியத்தில் குறிப்பிடத்தக்கது ஒன்றுமில்லை. தனிப்படத்தக்கதும் ஒன்றுமில்லை. தனிப்பட்டவர்கள் ஆராய்ச்சி எதுவும் செய்யாமல் இது கெட்டது அது கிழிந்தது என்று உருப்படியல்லாத அபிப்பிராயங்கள் தெரிவித்திருக்கிறார்கள். (டைம்ஸ்; லண்டன்.)

Cattle & Veterinary section.

கால் நடைப்பகுதி.

கிருஷிகன் பத்திரிகாசிரியர் அவர்களுக்கு வந்தனம்

ஐயா,

10-வது வால்யூம் 13-வது பக்கம் 2-வது வரியில் தினுசுக்கு அம்பர் அவுன்ஸ் வீதமாக வசம்பும் என்று பிரசுரிக்கத் தவறிவிட்டது. மருந்துகளில் 1-மருந்து விட்டாலும் வியாதியைக் கண்டிக்க மாட்டாது. இப்பிழை திருத்தம் போடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

வே. ப. திருமலையப்ப முதலியார்.

தும்பை செடியில் விஷசிகிச்சைக் கேற்ற தினிசு அறிவிப்பு

கிருஷிகன் 10ம் வால்யூம் 15ம் பக்கம் ஜலமண்டலி முதலிய விஷக்கடி சிகிச்சை நாம் கூறியதில் தும்பைச் செடி என்பதெவை? ஒவ்வோர் ஜில்லாவில் வெவ்வேறு பேர் கொண்டு வழங்கும். விபரங் கூறும்படி 15ம் பக்கம் அடிக் குறிப்பில் பத்திராசிரியர் வினவியுள்ளார்.

தும்பைச் செடியில் பலதினிசிருக்கிறது. ஒவ்வோர் தினிசையும் இங்கே விஸ்தரிப்ப தனாவசியம். விஷ சிகிச்சைக் கேற்ற தினுசுயெவை யென்று கூறுவது மாத்திரம் போதுமானதாக விருக்கும்.

தும்பைச் செடியில் நீலம், வெள்ளை, ரோசா, வர்ணமுள்ள புஷ்பம் புஷ்பிக்குந் தினிசுகளிருக்கின்றன. கடைசிபிற்குறித்த ரோசா நிறமுள்ள புஷ்பமுடைய தினிசே பெருந்தும்பை என்று வழங்குகிறது. 3-4-அடி உயரம் செடிவளரும். கிளைகள் இலைகள், சுண்ணாம்பு தீட்டியது போல் வெண்மையாயிருக்கும். செடியண்டை நெருங்கி இலைவாசனையை சுவாசிக்கில் விகாரமான வாசனை வீசும். குழந்தைகள் மாந்தத்திற்கும் வயற்றோச்சலுக்கும் வேறு சில மருந்துகளுடன் சுதேச வைத்யர் உபயோகிப்பதுண்டு.

வே. ப. திருமலையப்பமுதலியார்

வெள்ளகால் போஸ்டு கஸ்பா

தினசரி, வாராந்திர, மாதாந்திரப் பத்திரிகைகளில் விழும் அச்சுத் தவறுதல்களுக்கு, ஒன்றுக் கொன்று மாறாக அர்த்தம் கொடுப்பதாயிருந்தாலும், ஏதாவது விட்டுப் போனாலும் பிழை திருத்தம் போடலாமே யொழிய எழுத்துகள் தவறுதல் களுக்கு பிழை திருத்தம் போடும் வழக்கமில்லை யென்பதை நமது நேயர்கள் கவனிக்க விரும்புகிறோம்.

ப. ர.

How Prickly Pear can be easily converted into manure?

சப்பாத்து கள்ளி சலிசாய் உரமாவதெவ்வாறு?

சப்பாத்துகள்ளி உண்டான இடங்களில் அதன்தொந்தரவு சகிக்கவியலா. கள்ளியை வெட்டி குளிதோண்டிய கிடங்குகளில் வெட்டிய கள்ளியைத் தள்ளி மண்போட்டு மூடி 2-வருடங்கழித்து பேத்து அந்தமண்ணை உபயோகிக்க சிறந்த உரமானதுண்டு. சப்பாத்துக் கள்ளியடிமண் உரமாக்கவும் படுது. சப்பாத்துக் கள்ளி நெடுநாள் சென்று உரமாவதால் அதுவரை காத்திருந்து பொருமையா யுரமிட மனம் போவதில்லை. சப்பாத்துக்கள்ளி சில விடங்களில் சலிசாயுரமாக்கு முறையை தெரிவிப்பாம்.

ராமநாதபுரம் பக்கம் கிராமாங்கிராங்களில் நாகதாளியை கட்டு கட்டாகக்கொண்டு வந்து*கிணர்களில் போடப்படுகிறது 1-மாதத்திற்குள் அழுகி முள்தானே உதிர்ந்து விடுகிறது. முள்உதிர்ந்த கள்ளியை இரும்பில் தொரட்டி செய்து மூங்கில் கோல்களில் ஸ்தாபித்து அந்தத்தொரட்டியால் கள்ளியை வெளியாக்கி நஞ்சைக்குஉரமாக்கப் படுகிறது.கள்ளியில் முள்உதிர்ந்து விடுவதால் சேற்றில் மிதிக்க கஷ்டமேயில்லை. கள்ளி போடுவதால் உவர் நிலம் நன்னிலமாகி தக்க மாசூல் கிட்டுகிறது. கிடங்கில் போட்டகள்ளி சத்ததிகமா யிருக்கும். கிணர்களில் அழுகிய கள்ளி சத்து குறைவாகவே யிருக்கும். சலிசாயுரமாவதால் நஷ்டங் கவனிக்கப்படாது. நஷ்டந்தீர அதிகக்கள்ளி செலவாகும். கள்ளி அழுகிய கிணற்று ஜலம் பாசனமாகும்போது பயிர் புஷ்டியா யுண்டாகிறதாம்.

நன்றாய் கொதித்த வெந்நீரில் சப்பாத்து கள்ளியைப்போட்டால் முள்ளைலேசாய்ப் போக்கலாம். முள் போக்கிய கள்ளிமாட்டுத்தீனியாகலாம். உரமிடவும் சவுகரியமா யிருக்கும். கருப்பாலை வெல்லங் காச்சும் கொப்பரையில் கள்ளியை வேகவைத் தெடுக்கலாம்; உரக்கஷ்டமுள்ள பிரதேசங்களுக்கும் பஞ்சகாலம் மாட்டுத் தீனிக்கும் உபயோகிக்க சௌகரியமானது.

---

*நாகதாளியை ஊறப் போட்ட தண்ணீரை ஜீவன்கள்குடித்தால் அவைகளுக்குத் தீங்கு சம்பவிக்கு மாதலால் அப்படி ஜீவன்கள் குடிக்காத இடங்களில் மாத்திரம் இவ்வாறு செய்வதில் ஆட்சேபணையில்லை. ப, ர.

சென்னை விவசாய விலாகா 1917-ம் வருடம் 17-ம் நம்பர் துண்டு பிரசுரத்தில் சப்பாத்துக்கள்ளியை மாட்டு தீனியாக்கியமுறை பேசப்படுது. பல்லாரி டிவிஷன் டிப்டிடைரைக்டர் ஆராய்ச்சி செய்து தெரிவிக்கிறார்.

சப்பாத்துகள்ளியை தீயில்வாட்டி மாட்டுத்தீனியாக்கின தாயும் கள்ளி தீவனம் பழக்கமாகும்வரை சோழத்தாள் பருத்திவிரைகலந்து கொடுத்ததாயும் தீவனம் பழகியபின் தனி சப்பாத்துக்கள்ளி 50-றாத் தல்வீதம் 1-மாட்டுக்கு செல்வதாயுங் கூறப்படுகிறது. தீயில் வாட்டும் போது சிலசமயம் கள்ளியில் புகைபடிந்து மாட்டுக்குக் களிச்சல் பாதித்ததாகவும் சில சமயம் கள்ளியில் தவரிய முள் மாட்டு நாக்கில் பொத்து மாடுஅசை போடமுடியாமல் கஷ்டப்பட்டதை நிவர்த்தி செய்த தாகவுங் கூறப்படுகிறது.

பசும் புல் ஒன்றே தின்று உற்பத்தியாகிற மைசூர் அமிர் தமஹால் மாடு விர்த்திபால் பசும்புல் மட்டும் பூரா ஆகார மெனலாம. மற்ற தீவனம் எதுவும் பூர்ண உணவாகாது. போதுமான நெல்வைகோல் சோளத்தாள் போட்டாலும் பருத்தி விதை புண்ணாக்கு முதலிய விசேஷ உணவிடாக மாடு புஷ்டியாயிரா. பம்பாய் விவசாய டிபார்ட்டுமென்றார் 100 ராத்தல் நாகதாளியை விட 6 ராத்தல் புண்ணாக்கு சிறந்த உணவென்று தீர்மானித்திருக்கிறார்கள். அதை சென்னை விவசாய விலாகா அங்கீகரிக்க வேண்டுகிறோம்.

பஞ்ச காலம் வரும் போது நாகதாளி உபயோகிக்கும்படி சென்னை விவசாய விலாகா கூறுவது ஆச்சரியமா யிருக்கிறது. மாட்டுத் தீனிக்கேற்ற அகத்தி, சவண்டல், உன்னை, தூங்கு மூஞ்சி, கல்யாண முருங்கை, முதலிய விருக்ஷங்களை அங்கங்கே யுள்ள விவசாயப் பண்ணையில் போட்டு விருத்தியாக்கி பண்ணைகள் பசுஞ்சோலையாயிருக்கும்படி செய்து கால் நடைத்தீனியாக்கிவரின் சர்க்கார் பண்ணையைப் பார்த்து ஜனங்களும் அனுசரிக்க ஏதுவாகும். கால் நடைக் தீவனக் கஷ்டம் சொற்பமாவது நீங்கலாம்.

ராமநாதபுரம் ஜில்லா கிராமாந்திரங்களில் எந்த விவசாயி நிலத்தில் கள்ளியிருக்கினும் வெட்டி புதைக்கும்படியும் அல்லாதவரை அபராத தீர்வை போடுவதாயுந் தெரிகிறது. இது போன்ற நிர்ப்பந்தமான இடங்களுக்கும் நாகதாளியை சுலபமாய் தொலைக்கு முறை கூறுவாம்.

*½ ரூத்தல் சுண்ணாம்பும் ½ ரூத்தல் கந்தகமும் 3 பட்டணம்படி ஜலத்தில் கலந்து சுண்டக் காய்ச்சவும். பின் ½ ரூத்தல் நாம் சாப்பிடும் உப்பும், ஆர்ஸனேட் சோடா இவைகளை 2½ படி கொதிக்கும் வெந்நீரில் கலந்து முந்தின கலவையுடன் சேர்க்கவும். இந்த மிக்ச்சரை நாகதாளி அடித் தண்டில் 1 கத்தியால் குத்தி அதில் பீச்சாங் குழலால் மிக்சரை உருஞ்சி பீச்சவும்- இவ்வாறு மூட்டில் 2-3 தண்டுக்கு மிக்சர் பீச்சவே கள்ளி பூரா விஷமேறி 2-3 வாரத்தில் கள்ளி பட்டுவிடும். பட்ட கள்ளியை வெட்டுவது சுலபமாயிருக்கும். இந்த மிக்சர் 100-150 மூட்டு நாகதாளியைக் கொல்லக் போதுமானது.

ஆஸ்திரேலியா குவின்ஸ்லாண்டு மாகாணத்தில் உணவுக்காக குழி முயல் வருத்தி வளர்க்கப் பட்டது. அவை பல்கிப் பெருகி எங்கு பார்த்தாலும் பயிர்களை நிலைக்க விடாமல் அழிக்க குழி முயல் முன்னின்றது. முயல் அழிமதி செய்வதை நிறுத்த சப்பாத்துக் கள்ளியை வேலியாக்கப் பட்டது. சப்பாத்துக்கள்ளி எங்கு பார்த்தாலும் பரவி குவின்ஸ்லாண்டு மாகாண ஜனங்கள் வேறே மாகாணம் போய் குடிபுக விடும்படி அச்சம் உண்டாக்கிவருகிறது. அங்கே நாகதாளியைத் தொலைக்க பலவாறு முயல்கிறார்கள். முயற்சி முதிர்ந்து பொன்னாகக் கூடுகிறது. அந்த முயற்சி விவரிப்பதாயின் இந்த வியாசம் மிகவிரிவாய்விடும் அதில் நமக்கு வேண்டிய விஷயம் மட்டும் தொகுத்துப் பேசுவாம். நாகதாளியை வெட்டி சில காலம் காயப் போடப்படுது. காயப் போட்ட கள்ளியை அடுப்பெரிக்கப்படுது. அந்த சாம்பலை ஜலத்தில் கலந்து தெளிவு இறுத்து காய்ச்சி நீர் சுண்ட காய்ச்சவே பொட்டாஷ் என்ற சாம்பல் காரம் தயாராகிறது. இந்த முறை இங்கே ஆதரிப்பதாயின் கழிப்பு நிலங்களுக்கு உரமாக்கலாம் பிசுபிசுப்புத் தன்மை மாறி புலபுலத்த நிலமாகிவிடும் எலும்புதூள் புண்ணாக்கு உரம்போடும்போது சலவை செய்ய சாம்பற்காரம் இன்றியமையாது சேர்க்கலாம்-இந்த முறை தேசம் பூராபரவுமாயின் ஜர்மனி தேச வெடியுப்பிலிருந்து பொட்டாஷ் வருவது நின்றுவிடும். விறகு கிராக்கியான இடங்களில் நாகதாளியை † விறகாக்கி சாம்பலை உரமாக்குவது விசேஷ பலனுறதும். 5 ஏக்கர் நிலம் படர்ந்த சப்பாத்துக் கள்ளியிலிருந்து 1 டன் பொட்டாஷ் எடுக்கலாமென்று ஆஸ்திரேலியாவில் கணக்கிடப் பட்டிருக்கிறது.

வெ. ப. திருமலையப்ப முதலியார்

---

* இதை சில வருஷங்களுக்கு முன் சைதாப்பேட்டை பாரத்தில் டிரீட் செய்ததில் அவ்வளவு உபகாரமாயிருந்ததாகத் தெரியவில்லை. ப. ர.

† நாகதாளியில் 100-க்கு 75 பாகத்துக்குக் குறையாமல் ஜலவஸ்துவாதலால் அதைக் காயப்போட்டு எரிக்க லாயக்காக அநேக மாதங்களாவது பிடிக்குமென்பது எமது அபிப்பிராயம். ப. ர.

Correspondence.

கடிதம்.

ஐயா,

ம-ௗ-ௗ-ஸ்ரீ செல்வரங்கராஜு துரையவர்கள் சமுகத்திற்கு பொற்பந்தல் 1693.ம் சந்தாதாராகிய கண்ணப்ப முதலியார் எழுதிக்கொண்டது என்னவென்றால் க்ஷேமம் க்ஷேமம் தெரிவிக்கக் கோருகிறேன்.

தாங்கள் சென்ற வருஷத்திலிருந்து வெளியிடும் கிருஷிகன் பத்திரிகையை நான் வாங்கி வாசித்ததில் என் மனதுக்கு அதிக ஆனந்தத்தை உண்டு பண்ணிற்று. இது தவிர விவசாய சம்மந்தமாய் இரண்டு பத்திரிகைகளை வரவழைக்கிறேன். ஆனால் தாங்கள் வெளியிடும் பத்திரிகைக்கும் மற்றப் பத்திரிகைகளுக்கும் வித்தியாசம் என்னவென்றால் தங்கள் பத்திரிகையில் வெளியிடும் விஷயங்கள் மிக்க எளிய நடையில் பிரிவினை, பிரிவினையாக எல்லாருடைய மனதிலும் படியும் படியாக எழுதியிருக்கிறது. மற்ற பத்திரிகைகளோ விவசாய விஷயத்தில் மிக்க தேர்ச்சி பெற்ற சமுசாரிகளுக்குத் தெரியுமே தவிர விவசாயம் என்பது யின்னதென்று தெரியாமல் எங்கள் தகப்பனார் பயிரிட்டார் எங்கள் பாட்டனார் பயிரிட்டார் அதைப்போல நாங்களும் பயிரிடுகிறோம் என்று சொல்லுபவர்களுக்கு இவர்களுடைய கஷ்டம் விழலுக்கு நீர் இறைத்த மாதிரியாகப் போய் விடுகிறது. தங்கள் பத்திரிகை நின்றிருக்கும் பொழுது என்னுடைய விவசாய மாகப்பட்டது குருட்டுத் தன்மையிலிருந்தது. இப்பொழுதோ என்னுடையவிவசாயம் குருட்டுத் தன்மையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக நீங்கிக் கொண்டு வருகிறது. ஒரு குடும்பத்தில் யிருக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தாய் தந்தைகள் எப்படி சவாக்ஷணகர்த்தாவாக யிருக்கிறார்களோ அத்தன்மை போல் விவசாயம் செய்யும் குடியானவர்களுக்கு தாங்கள் வெளியிடும் பத்திரிகை சவாக்ஷணை கர்த்தாவாக யிருந்து கொண்டு வருகிறது. இன்னும் மேன்மேலும் விர்த்தியாக வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை சதாகாலமும் தியானம் செய்து கொண்டு யிருக்கிறேன்.

நான் தங்களைப் பார்த்து சில சந்தேகங்களைக் கேட்டு மனதிருப்தி அடைய வேண்டுமென்று எண்ணங் கொண்டிருக்கிறேன். தங்களைப் பார்க்க எப்பொழுது வந்தால் சவுகரியமோ அதை தெரிவித்தால் அதன்படி நடக்கக் காத்துக் கொண்டிருக்கிறேன். நான் இப்பொழுது 4 எக்கர் களிவாய் நிலத்தில் கருஞ்சேடை செய்து ஏராளமாய் தொழு எருவு போட்டு மணக்கத்தை நடவு செய்து 5 நாள் ஆயிருக்கிறது. அதற்கு மூட்டை எருவும் வாங்கி போடலாமென்று என் உத்தேசம். சல்பேட் ஆப் அம்மோனியாவும் சூபர் பாஸ்பேட்டும் போடலாமென்று சொல்லுகிறார்கள். அது போடலாமா? அப்படிப் போடுவதாயிருந்தால் தனித்தனியாய் போட வேண்டுமா? அல்லது ஏக காலத்தில் சேர்த்துப் போடலாமா? இல்லாவிட்டால் வேறு ஏதாவது மூட்டை எருவு சிலாக்கியமாயிருந்தால் அதைத் தெரிவித்தால் அதன்படி நடக்கிறேன். எது ஒரு விஷயமும் தங்களைத்தான் எதிர் பார்க்கிறேன். தாங்கள் யிந்தவிஷயத்தை அடுத்த மாத சஞ்சிகையில் தெரிவித்தாலும் சரி; இல்லா விட்டால் லெட்டரில் தெரிவித்தாலும்

சரி. இது தவிர எங்கள் கிராமப் பக்கங்களில் கார்த்திகை மார்கழி மாதங்களில் மிளகாய் நடவு செய்து ஜீவிக்கிறார்கள். இது விஷயத்தைப் பற்றி நீங்கள் விபரமாக எழுதினால் அனேக ஏழைகள் தாங்கள் சொல்லும்படியான வழியைக்கடைப் பிடித்து க்ஷேமமடைவார்கள். அதாவது: மிளகாய் நாற்று விடும் விதம் மிளகாய் நட வேண்டிய நிலசத்து சாரம், பின் நடவு செய்யும் விதம், மிளகாய்க்கு எந்த எருவு சிலாக்கியம், மிளகாய்க்கு தகுந்த பட்டம், நாற்றங்காலிலிருந்து எத்தனை நாளில் அப்புறப்படுத்துகிறது, சுமார் எத்தனை மாதம் வரைக்கும் யிருக்கும்? ஜலம் எத்தனை நாளைக்கொருதரம் பாய்ச்ச வேண்டும்; சுமார் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு மாசூல் கிடைக்கும்? இதை யெல்லாம் தாங்கள் தெரிவித்தால் மிக்க அனுகூலமா யிருக்கும். இது தவிர ஸ்ரீ ராஜகோபால் நாயுடு அவர்கள் போட்ட நெல் என்னும் புத்தகத்தில் பின் அட்டையில் தென் இந்திய விவசாயம் என்று ஒரு மாதாந்தர சஞ்சிகையைப் பார்த்தேன். அதில் எந்த விஷயத்தைப் பற்றி எழுதியிருக்கும்? அதைத் தெரிவித்தால் அதையும் வரவழைக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. என்னால் கூடிய மட்டும், அனேகரை கிருஷிகன் பத்திரிகையை வரவழைக்கும் படியாய் தூண்டிக் கொண்டிருக்கிறேன்.

1696ம் நெ. சந்தாதார் கண்ணப்ப முதலியார்.

பதில்

நான் என்னுடைய கடமையை என்னால் கிருஷிகருக்கு எவ்வளவு செய்யக் கூடுமோ அவ்வளவும் கிருஷிகன் பத்திரிகை மூலமாய் செய்து வருகிறேன். என்னைப் புகழ்ந்து பேசுவது எனக்கு மனவருத்தத்தையுண்டு பண்ணுமேதவிர, மற்றப்படி திருப்தியைத் தராதென்று நிருபநேயரும மற்றவர்களும் அறிய விரும்புகிறேன். என்னை நேரில் பார்த்துப்பேச நிருப நேயர் விரும்பினால் 3 நாள்களுக்குத் முன் கூட்டித் தெரிவித்து விட்டு எந்த நாளாவது காலை 9-மணிக்குள் வரலாம். என்னால் கூடிய மட்டும் தெரிந்த விஷயங்களைச் சொல்வதில ஆக்ஷேபனை கிடையாது. நிருப நேயர் குறிப்பிடும் மணக்கத்தை நெல்லின் வயசு சொற்பம்; அதாவது 3 மாதத்துக்குள் மாசூலுக்கு லாயக்கானது. இதில் நாத்தங் காலில் 3 வாரமாவது இருந்திருக்கும். தஞ்சாவூர் ஜில்லாவில் மங்கநல்லூர் சர்க்கார் பண்ணையில் பரிட்சை செய்து பார்த்ததில் நிருப நேயர் குறிப்பிடும் எருக்கள் உபயோகித்ததில் சொற்ப நாள் நெல் தினுசுகளில் ஜாஸ்திபலன் கொடுக்கவில்லை யென்று தெரிகிறது. யுக்திக்கும் அனுபவத்திற்கும் இது பொருந்தியேயிருக்கிறது. நிருப நேயர் குறிக்கும் எருக்களை தனித்தனியாய் உபயோகிக்க வேண்டுமென்று தான் அந்த எருக்கள் விற்கும் வியாபாரிகள் சிபார்சு செய்கிறார்கள். இவ் விஷயத்தைக்குறித்து அந்த எருக்கள் விற்கும் வியாபாரிகளாகிய மெசர்ஸ் பாரி கம்பனியார், ஷாவாலஸ் கம்பனியாருக்கு எழுதி நேரில் தெரிந்து கொள்ளலாம். களிக்கால் நிலங்களில இவ் எருக்கள் அனுபவத்தில் சம்பாவைப்போன்ற நெல் தினுசுகளுக்குக் கூடத் தொழு எருவைவிட ஜாஸ்தியான மாசூல் கொடுத்திருப்பதாகவும் தெரியவில்லை. நிருப நேயர் சுமார் 5 செண்டு நிலத்தில் இவ் எருக்களைப் போட்டுப் பார்த்து திருப்தியானால் ஜாஸ்தி விஸ்தீரணத்தில் உபயோகிப்பது எப்போதும்

சிலாக்கியம். ஏனென்றால் ஒரு எருவின்குணம் இயற்கையில் எவ்வளவு சிலாக்கியசரமானதாக இருந்தாலும் அவைகள் சரியானபடி பலன் கொடுக்க மண்ணின் இயல்பு அதிலிருக்கும் இந்திரியவஸ்து, வடிகால் வசதி, அணுக் கிருமிகளின் தினுசு, பயிரிடும் பயிரின் தினுசு, உயிர் வாழ்க்கை முதலிய அனேக சங்கதிகளைப் பொருக்கும். ஆகையால் சொற்ப விஸ்தீர்ணத்தில் எந்த சீர்திருத்தமும் செய்து திருப்திகரமாயிருந்தால் அதை ஜாஸ்தி விஸ்தீர்ணத்தில் செய்வது எப்போதும் நஷ்டத்தை யுண்டாக்காது.

மிளகாய்ப்பயிரைக் குறித்து ஒரு தனி வியாசம் முன்னமே கிருஷிகனில் வெளிவந்திருக்கிறது. நிருபநேயர் விருப்பப்படி இனி ஒருதரம், அதை சீர்திருத்தி தற்காலம் வரை கிடைத்திருக்கும் அனுபவங்களையும் சேர்த்து சீக்கிரம் கிருஷிகனில் எழுதப்படும். நிருபநேயர் குறிப்பிடும் தென் இந்திய விவசாயம் என்னும் மாதாந்திரப் பத்திரிகை ஸ்ரீமான் ஜி. இராஜகோபால் நாயுடு அவர்கள் பதித்துக் கொண்டிருந்தது வாஸ்தவம். ஆனால் அதை ஆதரித்து போஷணை செய்யத் தகுந்த உதவியில்லாமல் போனதால் நிறுத்திவிட ஏதுவாயிற்று.

ப. ர்

* * * * *

ம-ா-ா-ஸ்ரீ செல்வரங்கராஜு அவர்களுக்கு எம். சின்னசாமி வந்தனம்.

சென்னை பக்கத்தில் தோட்டக்கால் பயிர் செய்வதற்காக எந்தப்பக்கம் நல்ல இடம்? அடையாறு, பொன்னேரி, ராயபுரம், பெரம்பூர் இவைகளில் எது லாயக்கான இடமாக இருக்குமென்று எழுதக்கோருகிறேன். நேரிலும் தங்களைப் பார்க்கிறேன். தயவுசெய்து பதில் தெரிவிக்கக் கோருகிறேன். நல்லகிணறு கிடைக்கும் இடம்தான் அதாவது 4 அங்குலம் பம்புக்கு ஜலம் இடைக்கு மிடம் தான் நல்ல இடமென நினைக்கிறேன். இவ்விதமான இடம் தெரிவிக்க விரும்பும்

எம். சின்னசாமி

பதில்

சென்னை பக்கத்தில் தோட்டக்கால் பயிர் செய்ய நல்ல இடம் எது வென்று தாங்கள் கேட்கிறீர்கள். 4 அங்குலம் பம்புகள் வைத்து இஞ்ஜின்வைத்து இறைக்கக்கூடிய இடங்கள் திருவள்ளூர், பொன்னேரி முதலிய இடங்களிலிருக்கிறது. குசஸ்தலையார் என்று சொல்லும் ஆற்றுக்கு சமீபமாயுள்ள நிலங்களிலெல்லாம் அனேகமாய் இஞ்சின்வைக்கக்கூடும். பொன்னேரி தாலூகா சூராப்பேட்டை கிராமம் சென்னையிலிருந்து 17 மையில் தூரமிருக்கிறது. இஞ்சின்களுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்கக்கூடிய கிணறுகள் அமையும். பொன்னேரிக்கு சமீபமாய் மீஞ்சூர், குளத்தூர் அனுப்பும்பட்டு முதலிய இடங்களிலும் கிணறுகள் அமையும். இவ்விடங்களில் விவசாயம் செய்ய ஒரு முக்கிய இடையூறு என்ன வென்றால் வேலை செய்யப் போதுமான ஆட்கள் விவசாயத்திற்குக் கிடைப்பதில்லை, ரெயில்வே, உப்பளம், மில்கள் முதலியவை சென்னையிலும் அதற்கு சமீபத்திலும் ஜாஸ்தியா யிருப்பதாலும் அவைகளில் தக்க கூலி கிடைப்பதாலும் விவசாயத்தை அலட்சியம் செய்து மேல் சொன்ன பிரவர்த்திகளில் பிரவேசிக்கிறார்கள். சென்னைக்கு இன்னமும் சமீபமாயிருக்கும் பூந்தமல்லி,

அமிஞ்சிக்கரை கோயம்பேடு முதலிய இடங்களிலும் நல்ல கிணறுகள் அமை யக் கூடும். ஆனல் நம்பிக்கையான வேலை ஆட்களும் மாகூலை பத்திரப் படுத்திக் கொடுக்கக் கூடியவர்களும் ஜாஸ்தி இல்லை. இதுவும் ஒரு முக்கிய இடையூறு; தாங்கள் சென்னை பக்கம் வந்தால் என் வீட்டுக்கு வரும் பாக்கி யம் கிடைக்க வேண்டுமென்று கோருகிறேன்: ப. ர்.

ஐயா,

* 31-10-26 தேதியுள்ள உலகசேவை பத்திரிகையில் (கிருஷிகனில்) 195 வதுபக்கத்தில் பிரசுரித்துள்ள திருநெல்வேலி ஜில்லாவில் பயிர் செய்துவரும் விதை தினுஸான இதன்கீழ் குறிக்கப்பட்டுள்ள விதைகள் எனக்கு தேவையாயிருப்பதால் தயவு செய்து ஷைவிதைகளை மாதிரிக்காக வருத்தி கீழ்கண்ட என் விலாசத்திற்கு வி. பி. தபால் மூலமாய் அனுப்பி உதவ்புரிய வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

* இளவித்து மொச்சை பட்டணம் படி 4
பச்சைப் பயிறு ,, ,, 4 ராகவேந்திராவ்

பதில்

இளவித்து மொச்சைதினுசு விதை வேண்டியவர்கள் ம-ா-ா-ஸ்ரீ வி. பி. திருமலைபப்புமுதலியார் அவர்கள் இனம்வெள்ளைகால், வெள்ளைகால்போஸ்டு திருநெல்வேலி ஜில்லா, விலாசத்திற்கு லெட்டர் எழுதி முன் பணம் அனுப்பினுல் மொச்சைவிதை வாங்கியனுப்புவார்கள். அவர்களிருக்கும் கிரா மத்திற்குப் பக்கத்தில் பாலூர், இராஜபாண்டி முதலிய இடங்களில் இது இப்போது விதைக்கும் காலம். பச்சைப்பயறு விதையைப்பற்றி கிருஷிகனில் எழுதவில்லை. ப. ர்.

ம-ா-ா-ஸ்ரீ கனம் கிருஷிகன் பத்திரிகை மானேஜர் அவர்கள் சமுகத்திற்கு:—

இராமச் சந்திர எற்றத்தின் முழு விபரங்களும் பாங்கு நெல்லைப் பற்றி யும் யாதொரு விபரங்களும் அடியேனுக்குத் தெரியாததால் தியக்கத்தோடு இருக்கிறேன்.

S. நாராயணசாமி ரெட்டி.
வேம்பார்பட்டி கிராமம்; திண்டுக்கல் போஸ்டு

பதில்.

இராம சந்திர எற்றத்தைக் குறித்து ம-ா-ா-ஸ்ரீ இராம சந்திர ஐயர் c/o ம-ா-ா-ஸ்ரீ வி. சி- ரங்கசாமி செக்ரடரி செண்டிரல் அர்பன் பாங்க லஜ் மைலாப்பூர் என்று எழுதினுல் அவர் பூரா விவரம் எழுதி யனுப்புவார்.

பாங்கு நெல் விதை நாகபூரிலிருந்து வருவிறதற்கு சற்று இடையூறுக ளிருக்கின்றன. சர்க்காரார் மூலியமாப் தருவிப்பது பிரயாசையா யிருக்கிறது. ஏனென்றால் ஒரு பிராந்தியத்திலிருக்கும் நோய் நோடிகள் மற்றபிராந் தியங் களுக்கு விதை மூலியமாய் பரவுமென்பதால் அனேக தடைகள் அவ்விடமி ருந்து விதை தருவிக்க எற்பட்டிருக்கிறது. நமக்கு அவ்விடம் சந்தாதாரார் களாவது, எஜண்டுகளாவது, சிநேகிதர்களாவது இல்லை. ஆகைபால் பணம் வாபீசு செய்யச் சொன்னுல் வாபீசு செய்யப்படும். இல்லா விட்டால் இங் கிருக்கும் விதை போதுமென்று நிருப நேயர் குறிப்பிட்டால் நல்ல விதை யாய் தருவித்துக்கொடுக்கக் கூடும். பதில் தெரிந்த உடன் அவ்வாறு செய்யப் படும். ப. ர்.

News & Notes
குறிப்புகள்

பக்தி செய்யும் பனை

வட நாட்டில் பாட்னா ஜில்லாவிலுள்ள ஸொசோட்ரா கிராமத்தில் காலையில் சூரியன் உதய மாகையில் ஒரு பனை மரம் வணக்கம் செய்வது போல் கீழே விழுந்து சூரியன் அஸ்தமித்ததும் முன் போலவே நிமிர்ந்து நின்று விடுவதைத் தரிசித்து அதற்குப் பூஜை செய்ய ஆயிரக் கணக்கான யாத்திரீகர்கள் அங்கு சென்று வருகிறார்கள்.

இதுபோன்ற வேறு சம்பவங்களும் நடந்திருக்கின்றன. "செடிகளின் இயக்கம்" என்பதைப்பற்றி ஜகதீச சந்திரபோஸ் எழுதியிருக்கும் நூலில் வங்காளத்தில் பரித்பூரில் பிரார்த்தனை செய்யும் பனைமரத்தைப் பற்றிப்பேசியிருக்கிறார் "பரித்பூருக் கருகில் ஒரு பனை மரத்தின் செய்கை அதிசயமானதாக இருக்கிறது. மாலையில் கோயில் மணிகளை அடிக்கையில் அந்தப் பனை மரமானது நமஸ்காரம் செய்வது போல் படுத்துக் கொண்டு, மறுபடியும் காலையில் நிமிர்ந்து கொள்ளுகிறது! ஜனங்கள் ஏராளமாக அங்கு சென்று பார்த்து வருகிறார்கள். இந்தப் பனைமரத்திற்குப் பிரார்த்தனை செலுத்துவதால் தீராத வியாதிகளும் குணமடைவதாகச் சொல்லுகிறார்கள். அதைப் பற்றி எவ்வித அபிப்பிராயமும் சொல்ல வேண்டியதில்லை. நம்பிக்கையே காரணம்" என்று அவர் சொல்லி யிருக்கிறார்.

மேலே கூறிய மரம் ஐந்து மீட்டர் சுற்றளவுள்ளதாகவும், மத்தியில் 25 ஸெண்டி மீட்டருள்ளதாகவும் இருக்கிறது. இது காற்றில் சாய்ந்திருக்க வேண்டும். அது இப்பொழுது செங்குத்தாக இல்லாமல் 6 டிகிரியிலிருக்கிறது. அதைப் பார்க்கும் ஜனங்கள் அது உயிருள்ள ராகுல சொரூபமென்று கருதுகிறார்கள்.

அழுகின்ற மா

கல்கத்தாவில் அழுகின்ற மாமரம் ஒன்றிருக்கிறது. அதைப் பற்றியும் ஸர். ஜே. வி. போஸ் தமது நூல்களி லொன்றில் குறிப்பிட்டிருக்கிறார், அது நன்றாக வளர்ந்த மாமென்றும், 39 அடி உயரமிருக்கிற தென்றும். சுற்றளவு 38 அங்குலம் இருக்கிறதென்றும், அதனுடைய கிளைகளும் தழைகளும் 90 சதுர மீட்டர் விஸ்தீரணம் வியாபக முடையவைகளாக இருக்கின்றன வென்றும், பிரதி தினமும் ஒரு மணிக்கு இந்த மாம் அழ ஆரம்பிக்கிற தென்றும், ஆரம்பத்தில் கண்ணீர் அதிகமாக வடிகிற தென்றும், இரண்டு விநாடிகளுக்கு ஒரு துளி விழுகிற தென்றும், வரவா அது குறைந்து வருகிறதென்றும், 2 மணிக்கு மேல் 5 விநாடிகளுக்கு ஒரு துளியும், 3-மணிக்கு மேல் 8 விநாடிகளுக்கு ஒரு துளியும் 4 மணிக்கு மேல் 15 விநாடிகளுக்கு ஒரு துளியும், 5 மணிக்கு மேல் 150 விநாடிகளுக்கு ஒரு துளியும் விழுகிற தென்றும், தினந்தோறும் இவ்விதம் நடை பெறுகிற தென்றும் அவர் சொல்லி யிருக்கிறார். இது கெட்ட சகுனமென்று ஜனங்கள் கருதி அச்சமடைந்திருப்பதாகவும் அவர் சொல்லி யிருக்கிறார்.

"லோகோபகாரி."

"கிருஷிகன் பஞ்சாங்கம்.

பிரபவஸு வைகாசிமூ—சாலிவாகன 1850 கலியுகாதி 5029, பசலி 1336—கொல்லம் 1102—ஹிஜரி 1345, இங்கிலீஷ் 1927ம்ஸு மேமீ—ஜூன்மீ

சித்திரைமீ	மேமீ	வைகாசிமீ	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
12	14	1	சனி	துர38-2	சித்40-49	மர40அ	
13	15	2	ஞா	சது42 52	சுவா47-2	சித்47ம	பத்திரிகை பிரசுரிக்க
14	16	3	திங்	○46-40	விசா52-25	ம52சி	மருந்து உண்ண
15	17	4	செவ்	பிர49-40	அனு 56-55	சித்57ம	தான்யம் கட்ட
16	18	5	புத	துதி51-52	கேட்60	சித்60	மழை 6 நாள்வரை
17	19	6	வியா	திரி52.49	கே0-32	பி032சி	மிதுனம் விவாஹம்
18	20	7	வெ	சது52-49	மூல2-59	அமி3ம	கரி நாள்
19	21	8	சனி	பஞ்51-27	பூரா4-25	சி60	தானியம் செலவிட
20	22	9	ஞா	சஷ்48-59	உத்4-39	அ60	சர்வமுகூர்த்தம்
21	23	10	திங்	சப்45-27	திரு 3-47	அ4சி	கடகம் விவாஹம்
22	24	11	செவ்	அஷ்40.45	அவி1-47 சதை58-37	சி2ம	பூமி கொள்ள
23	25	12	புத	நவ34-59	பூரட்54-29	அ54சி	ஏற்றம் கவலைபோட
24	26	13	வியா	தச28-22	உத்49-37	சித்60	கருணை நட
25	27	14	வெ	ஏ21,12	ரேவ44-14	அ60	விதை விதைக்க
26	28	15	சனி	து13·37	அஸ்38-39	சித்60	எருது வாங்க
27	29	16	ஞா	தி6-5 சது58·52	பர33-9	சித்60	கரி நாள்
28	30	17	திங்	● 52-8	*கிரு28-17	ய28அ	அரசமர பிரதிஷ்டை
29	31	18	செவ்	பிர46-45	ரோ24-9	அ24சி	தானியம் இருப்பு
30	1	19	புத	துதி42-29	மிரு21-19	சித்60	மிதுனம் விவாஹம்
1	2	20	வியா	திரி39-47	திரு19-55	ம19அ	நாட்டிய மாரம்பிக்க
2	3	21	வெ	சது38-52	புன20-15	சி20ம	அதிகாரம் பெற
3	4	22	சனி	பஞ்39-49	பூசம்22.19	சி22ம	சிம்மாசன மேற
4	5	23	ஞா	சஷ்42-27	ஆயி26-7	சி26ம	ஜபம் பூர்த்திசெய்ய
5	6	24	திங்	சப்46-32	மக31-28	ம31சி	தான்ய நாள்
6	7	25	செவ்	அ51-45	பூரம்37-57	சி38அ	ஆயுதப்பிரயோகம்
7	8	26	புத	நவ57-27	உத்45-6	அ46ம	விருக்ஷங்கள் நட
8	9	27	வியா	தச60	அஸ்52-23	சித்60	கடகம் விவாஹம்
9	10	28	வெ	தச4-32	சித்59-29	சித்60	காலை8உபாயனம்
10	11	29	சனி	ஏகா8-39	சுவா-60	அ60	புஸ்தகம் விற்க
11	12	30	ஞா	துவா13,12	சுவா-5-37	சி5ம	ராத்து நட
12	13	31	திங்	திர16-47	விசா10-49	ம11சி	மாடு வாங்க
13	14	32	செவ்	ச19-7	அனு14-55	சி15ம	பெரியோரைதரிசிக்

திருப்பூர்

கம்போடியா காட்டன் பிளாண்டிங்

அண்ட் கதர் மெனுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,

கலியுகத்தில் சகல தேசத்தினராலும்
சகல மதத்தினராலும் அவதார புருஷனெனப்
போற்றும் "மஹாத்மாகாந்தி" அவர்களிடம் அன்புண்டா?

அப்படியானால் அவருடைய முக்கிய கொள்கையான கத்தர் அபிவிர்த்திக்காக சதாகாலமும் தம் உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் தத்தம் செய்திருக்கிறார். அவர் ஞாபகார்த்தமாய் ஸ்தாபிக்கிருக்கும் இக்கம்பெனியில் பங்குகள் எடுத்துக் கொண்டு ஆதரிப்பது தங்கள் கடமை யன்றோ? பங்குகளுக்கு அதிக லாபம் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் தமிழ் நாட்டில் திருப்பூர் கத்தர் உற்பத்திக்கு மிகவும் பெயர் பெற்றிருப்பது உலகமறிந்த விஷயம். திருப்பூர் கம்போடியா காட்டன் பிளாண்ட்டிங் அண்ட் கதர் மெனுபாக்சரிங் கம்பெனி லிமிடெட் ஆபீஸ். அங்கேரிபாளையம் (அனுப்பர்பாளையம் P O கோயம்புத்தூர் ஜில்லா)

ரிஜிஸ்டர் செய்த மூலதனம் ரூ3, 50, 000 பங்கு 1—க்கு 10-ரூபா வீதம் 35,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டது. இதுபரியந்தம் கொடுக்கப்பட்ட பங்குகள் ரூ. 161,600. இன்னும் கொஞ்சம் பங்குகள் தான் கொடுக்க உத்தேசம் தகுந்த லாபம் பங்குகளுக்குக் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.

ஸ்பெஷலாக டிபாசிட்டுகளுக்கு தகுந்த வட்டி கொடுக்கப்படும். 5 வருஷத்திய டிபாசிட்டுக்கு 100-க்கு 1 வருஷத்துக்கு 10-ரூபா வீதம் வட்டிக்கு பெற்றுக் கொள்ளப்படும். சகலமான டவுன்களுக்கும் தக்க கமிஷன் பேரிலும் சம்பளத்தின் பேரிலும் ஏஜண்டுகள் தேவை, ஷை கம்பெனியை சென்னை கவர்ன்மெண்டு விவசாய அஸிஸ்டெண்டு டைரக்டர் ஸ்ரீமான். K- N- K. சுந்தரம் அவர்கள், தாசில்தார், வக்கீல்கள் மதராஸ். N- தண்டபாணிப் பிள்ளை முதலிய அனேக கனவான்கள் விஜயம் செய்து தகுந்த சர்டிபிகேட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். இன்றே இந்த விளம்பரத்தை வெட்டி யனுப்புங்கள்-

ஐயா, இக்கம்பெனியில் நான்...... பங்குகள் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்; ஆகலால் தயவு செய்து பங்கு விண்ணப்பத்தை கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறேன்-

முழுப் பெயர்..

பூரா விலாசம் தொழில் விபரம்..

தபால் ஆபீஸ்..

ஜில்லா..

குறைந்த விலை **ஜகன் மோகினி** நிறைந்த சுவை

இது ஓர் தமிழ் நாவல்களடங்கிய மாதாந்த சஞ்சிகை.

இதன் நான்காவது ஆண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாளால் எழுதப்பட்ட பத்மசுந்தரன் என்னும் விநோதமான துப்பறியும் நாவல் வெளியாகின்றது. இதன் வருடசந்தா உள்நாடு வெளிநாடு இரண்டிற்கும் ரூபா 1-8-0. மாதிரிப்பிரதி அணா 3. இதன் சந்தா நேயர்களுக்கு சென்றஆண்டில் வெளியான வைதேகி இரண்டு பாகங்களும் ரூபா 2-க்குக் கொடுக்கப்படும். 5 சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும் நண்பர்களுக்கு 1 வருஷ சஞ்சிகையும் 12 பேர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு வைதேகி 2-பாகங்களும் 1- வருஷ சஞ்சிகையும் இனாமாகக் கொடுக்கப்படும்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி, Madras.

கமலபாலன்
தமிழ் மாதப் பதிப்பு

தென்னாட்டில் சம்ம ஜாதீயப் பத்திரிகை இஃதொன்றே. கிராம வாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1 தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தக பாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.

R. வெங்கிடசாமி நாயுடு.
பத்திராதிபர் கமலபாலன்.
திருத்தாங்கல்

விவசாய புஸ்தகங்கள்

	ரூ அ பை
விவசாய விளக்கம்	1—4—0
நெல்	1—0—0
கரும்பு	1—0—0
மா	0—7—0

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு
பென்ஷண்ட் விவசாய இன்ஸ்பெக்டர்
பெரியபாளையம் போஸ்ட், பொன்னேரி மார்க்கம்

Printed at the "Raju Press" and Published by Rao Bahadur J. Chelvaranga Raju at Saidapet, MADRAS.